ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

ஆரம்பம் 1969 பெப்ரவரி









50/=

ஒக்டோபர் - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஒக்டோபர் உ 2017

மலர் - 49 இதழ் - 10


ஆசிரியர்

அருட்தந்தை. ரமேஷ் கிறிஸ்றி

இணை ஆசிரியர்

மெற்றில்டா இராஜேந்திரம்

துணை ஆசிரியர்

பெஸ்லியோ வாஸ்

கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்

வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்.

மட்டக்களப்பு மறை மாவட்டம்

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் – 44


மட்டக்களப்பு.

பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,

திருமலை வீதி,

மட்டக்களப்பு.

## உள்ளே


அன்புடன் உங்களோடு ................ 01

செபமாலை பக்தியை ................ 02

குறுங் கதை ................ 04

கார்மேல் பற்றிமா கல்லூரி ........ 06

எனைப் போற்றி ................ 07

குருத்துவப் பொன்விழா ................ 08

விடியலொடு அமைதி ................ 09

வெள்ளிவிழா வாழ்த்து ................ 10

உலகெங்கும் மரியாள் ................ 11

எண்ணிப்பார்க்கையில் ................ 11

மாணவர் பக்கம் ................ 12

சின்ன விசயங்கள் சிறந்த ........ 13

மருத்துவம் ................ 14

திருஅவைச் செய்திகள் ................ 15

தமிழ்த் தாயின் தனி வரலாறு ..... 16

இதுதான் அரசியல் ................ 17

வெள்ளிவிழா நிறைவில் ............ 20

கத்தோலிக்கத் திருமறை ............ 21

இலக்கிய மஞ்சரி ................ 22

புனிதர்களை அறிவோம் ............ 23

உதித்தது சுடரொளி ................ 24

கடுகுக் கதை ................ 25

போட்டி முடிவுகள் ................ 26

திருவிவிலியம் கற்போம் ............ 27

அறிவை வளர்ப்போம் ................ 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE

P. O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

E.mail: battiscc@gmail.com


விலை : 50/=

ஆண்டுச் சந்தா : 550/=

(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

அன்பு மிக்க சகோதரங்களே!

ஒக்டோபர் மாதத்திலே உலக முதியோர் தினம், சமூகத் தொடர்பு தினம் என்பவற்றை அனுஷ்டிக்கின்றோம். அத்தோடு செபமாலை அன்னையையும் நினைவு கூருகின்றோம். இந்த வேளையிலே,

தன் பிஞ்சு குழந்தை மண்ணில் தவழ
தன் உயிர் துறந்து மறுஜென்மமாகி
புத்துயிர் கொடுக்கின்றாள் தாய்.
தன் குழந்தை உலகம் காண
தன் நெஞ்சம் துறந்து இராப்பகலாய்
சிந்தனை, செயல் அனைத்தும்
ஓர் சிந்தனையாய் குழந்தைக்காய்
உழைக்கின்றான் தந்தை
ஆனால், வாலிபம் வயோதிபமாய் மாற
நம்மை உயர் நிலைக்கு உருவாக்கிய
தாய், தந்தையரை முதியோர் என
எண்ணி முதியோர் இல்லம் சேர்த்திடலாமா?
சிந்தனை செய்! எண்ணித் துணி
இவ் வருடமாவது முதியோர் தினமதில்
உன் கண்ணின் இருமணிகளாய்
தாய், தந்தையை நினை!
உன் உடலில் உயிர்மூச்சு
சுவாசிக்கும் வரை உன் உயிருள்ள
தாய், தந்தையை முதியோர் என
தள்ளிவிடாதே! ஒக்டோபர் ஒன்று
உன் வாழ்வின் ஒளி விளக்குகளுக்கு
திருவிழா செய்!

இன்றைய காலகட்டத்திலே பெற்றோர்கள், பிள்ளைகளை வளர்க்கும்போது மிகவும் அக்கறையுடனும், பொறுப்புக்களை உணர்ந்தும் செயல்படுங்கள். இது நீங்கள் வாழ்ந்த சூழ்நிலைகளையும் தாண்டி உலகம் இயந்திர மயமாக்கலின் கைகளிலே என்று இணையத்தின் வாயிலில் எல்லாமே சிக்குண்டு சமூக தொடர்பாடலால் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இதிலே உங்கள் பிள்ளைகள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனியுங்கள். இன்று உலகையே ஆட்டிப்படைத்து உயிர்களைக் காவு கொள்ளும் விளையாட்டுக்கள் (Blue Whale Game) காணப்படுகிறது. அவ்வாறான செயற்பாடுகளால் எத்தனையோ உயிர்கள் மடிந்துள்ளன. இதனால், உங்கள் பிள்ளைகள் இணையத்தைச் சரியான வழியிலா? தவறான வழியிலா? பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனியுங்கள்.

நம்முடைய வாழ்விலே நம் பிள்ளைகள், இவ்வாறான வழிகளிலே சிக்குண்டுத் தவிக்காத வண்ணம் நம் பிள்ளைகளைக் கடவுளின் பால் ஈர்ப்புக் கொள்ளும் வண்ணம் அவர்களது வாழ்வை விசுவாசப் பாதையிலே வளர்த்துக்கொள்ளுங்கள். இந்த மாதம் நாம் செபமாலை அன்னையை நினைவு கூருகின்றோம். அவ்வாறான வேளையிலே நாம் நம் வீடுகளிலே குடும்பமாய் ஒன்று கூடி இறைவனுக்கு என்று ஒரு நேரத்தை செலவழித்து ஜெபிப்போம். அன்னையை நோக்கி அனுதினம் ஜெபமாலை தியானிப்போம் என்று குழந்தைகளை இறை பக்தியில் ஈடுபடுத்துங்கள். அன்னையின் அன்பிலும், ஆசீரிலும் மூவொரு கடவுளின் நிறைவான ஆசீரால் நிறைந்த குடும்பங்களாய் வாழுங்கள் என்று உங்களிடம் கேட்கின்றேன்.

இந்த மாதம் 12ம் நாள் நம் மறைமாவட்ட மேதகு ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை அவர்கள் தமது பிறந்த தினத்தை கொண்டாடவுள்ளார். அன்றைய தினம் ஆயரை வாழ்த்துவதுடன், அவருடைய பணி வாழ்விலும், உடலாலும், உள்ளத்தாலும் நிறைவான ஆசீரோடு வாழ ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம். ஆமென்.

- ஆயர் -




**"நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு:
முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை
விட்டுவிடமாட்டார்"**

– நீதிமொழிகள் 22:6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செபமாலை பக்தியைப் பரப்பிடுவோம்

செபமாலையில் இரண்டு செபங்கள் அடிப்படைச் செபங்களாக உள்ளன. ஒன்று "கர்த்தர் கற்பித்த செபம்" (மத் 6 : 9 – 13) மற்றொன்று "மங்கள வார்த்தை செபம்" (லூக்கா 1 : 26 – 38). இந்த இரண்டு செபங்களும் கத்தோலிக்க திருச்சபை விசுவாசிகளின் முதல் பக்தி முயற்சியாய் இருந்து வருகின்றன. இயேசுவின் திருத்தூதரின் காலம் தொட்டு, இன்று வரை உபயோகத்தில் இருந்து வரும் செபமும் இவைதான்.

**செபமாலை உருவான வரலாறு :**

நாம் தற்போது செபிக்கும் வடிவிலுள்ள செபமாலை அமைப்பு முறை 1214ல் தான் முழு வடிவம் பெற்றது. தப்பறையான கொள்கைகளைப் பரப்பி பாவத்தில் வாழ்ந்த மக்களை மனந்திருப்ப புனித சுவாமிநாதர் வழியாக மரியா கற்றுக்கொடுத்த செபம் தான் செபமாலை. புனித சுவாமிநாதர் காலத்திற்கு முன்னரே செபமாலை வழக்கத்தில் இருந்துள்ளது. துறவற சபையார் 150 சங்கீதங்களைப் பாடுவதற்குப் பதிலாக இயேசு கற்பித்த செபத்தைச் சொல்லி வந்துள்ளனர். மரியன்னையின் துறவறச் சபையார் இன்றைய அருள் நிறைந்த மந்திரத்தின் முதல் பகுதியைச் சொல்லி வந்துள்ளனர். 15ஆம் நூற்றாண்டு வரை செபமாலை மூன்று ஐம்பது மணிகளாகப் பிரிக்கப்படவில்லை. 16ம் நூற்றாண்டில் ஒவ்வொரு பத்து மணி செபத்திற்கும் தேவ ரகசியங்கள் தியானிக்கும் வழக்கம் அங்கீகரிக்கப்பட்டது.

கி.பி 1569ஆம் ஆண்டு திருத்தந்தை 05ம் பத்திநாதர் செபமாலையை இன்று வழங்கப்படும் விதமாக அதிகார பூர்வமாக அங்கீகரித்தார். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் 1573ம் ஆண்டு, அக்டோபர் மாதம் ஏழாம் நாள் துருக்கியரிடமிருந்து ஐரோப்பா காப்பாற்றப்பட்டது எனவும், செபமாலையால் கிடைத்த வெற்றிக்காகவும் நன்றியறிதலாகத் திருத்தந்தை 05ம் பத்திநாதர் அன்று செபமாலை அன்னையின் திருவிழாவை ஏற்படுத்தினார்.

பாத்திமாவில் நம் அன்னை "நான் திருச் செபமாலையின் அன்னை" என மொழிந்த பின் (மே 13, 1917) செபமாலையின் பக்தி முழுவதுமாக உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. நம் அன்னை பாத்திமாவில் காட்சியளித்த அந்த மூன்று சிறுவர்களுக்கும் (லூசியா, பிரான்சிஸ்கோ, ஜெசிந்தா) பின்வரும் வார்த்தைகளை செபமாலையின் ஒவ்வொரு 10 மணிகளின் நிறைவில் சொல்ல கற்பித்தார்.

"ஓ ! என் இயேசுவே,<br>என் பாவங்களை மன்னியும்<br>நரக நெருப்பிலிருந்து<br>எங்களைக் காப்பாற்றும்<br>சகல ஆத்துமாக்களையும்<br>சிறப்பாக உமது இரக்கம் யாருக்கு<br>தேவைப்படுகிறதோ , அவர்களையும்<br>மோட்சத்தில் சேர்த்தருளும்"

இவ்வார்த்தைகள் மரியாவே செபமாலையுடன் இணைத்த வார்த்தைகள். இயேசுவின் மனுவுருவின் இரகசியத்தை இந்தச் செபமாலை கொண்டுள்ளது. நாம் இந்த இரகசியத்தை இருபது தேவ இரகசியங்களாகச் செபமாலை முழுவதும் தியானிக்கின்றோம். செபமாலை என்பது "புதிய ஏற்பாட்டின் சுருக்கம்" என்றே கூறலாம். இயேசுவின் பிறப்பு, பணிவாழ்வு, இறப்பு, உயிர்ப்பு எனப் புதிய ஏற்பாட்டில் உள்ள அனைத்துச் செய்திகளையும் இரத்தினச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கமாய் தியானிக்கும் வழிமுறையாக இந்தச் செபமாலை அமைந்துள்ளது.

1. மகிழ்ச்சி நிறைப் பேருண்மையைத் தொடங்கும் போது அன்னை மரியாவைப்பற்றித் தியானிக்கின்றோம். இந்த மறையுண்மையில் இறைமகன் இயேசுவின் பிறப்பின் முன்னறிவிப்பு, பிறப்பு, இளமைப் பருவம் பற்றித் தியானிக்கின்றோம்.

2. ஒளிநிறை பேருண்மையில் இறைமகன் இயேசுவின் பணி வாழ்வினைப்பற்றிச் சிந்திக்கின்றோம். இந்த மறையுண்மையில் (ஏழை) கானாவூர் திருமணத்தில் தண்ணீரை திராட்சை இரசமாக மாற்ற அன்னை மரியா துணை நின்று பரிந்துரைப்பதைப் பார்க்கின்றோம். எனவே நமக்காய் பரிந்து பேசுபவர் அன்னை மரியா என்பதை நாம் உணர்கின்றோம்.

3. துயர் நிறை பேருண்மையில் இயேசுவின் பாடுகள், இறப்பு பற்றி தியானிக்கின்றோம். இந்தப் பேருண்மையிலும் கூட அன்னை மரியா சிலுவையின் அடியில் நிற்பதையும் தம் மடியில் இயேசுவின் உயிரற்ற உடலைச் சுமப்பதையும் தியானிக்கின்றோம்.

4. மகிமை நிறை பேருண்மையில் இயேசுவின் உயிர்ப்பை பற்றிச் சிந்திக்கின்றோம். இதில் இறுதியாக அன்னை மரியா விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டப்படுவதைத் தியானிக்கின்றோம்.

இதன் மூலம் இயேசுவின் மண்ணக வாழ்வைப் பொறுத்த வரை முதலும் முடிவுமாக இருக்கின்றவர். அன்னை மரியா இவ்விதமாகச் செபமாலைத் தியானத்தின் மூலம் இயேசுவின் முழு மனித வாழ்வையும், அதில் மரியாவின் முழுமையான பங்கு பற்றுதலையும் தியானிக்க முடிகின்றது.

"செபம் செய், தவம் செய்" என்கிறவர் அன்னை மரியா. பாவிகள் மனம் திரும்ப, உலகில் அமைதி ஏற்பட, யுத்தங்கள் நிறுத்தப்பட செபமாலை சொல்லுங்கள் எனக் கேட்டு நிற்கின்றார். அன்னை பாத்திமாவில் காட்சி தந்தபோதும், லூர்து நகரில் காட்சி தந்தபோதும், சலேத் நகரில் காட்சி தந்தபோதும், புனித சுவாமிநாதருக்குக் காட்சி தந்தபோதும், செபமாலையுடன் தோன்றிச் செபிக்கும்படி கூறுகின்றார். இன்றும் பலருக்கு கனவுகள், காட்சிகள் வழியாக அதே செயலைத்தான் செய்யும்படி கூறுகின்றார்.

செபமாலை செபிப்போர்க்கு ஜெயம் தருபவர் அன்னை. திக்கற்றோருக்குத் தஞ்சமாக இருப்பவர் அன்னை. தயங்கி வரும் உள்ளம் கொண்டோருக்குத் தாயானவர் அன்னை. கலக்கம் நமக்குப் போக்கிட கரம் விரித்து நிற்பவர் அன்னை. மாசுகள் நம்மில் மறைந்திட நேசமாய் நம்மைக் காப்பவர் அன்னை. தடுமாறும் வாழ்க்கை கரைசேர அடைக்கலமாய் இருப்பவர் அன்னை. நாமும் அன்னையோடு இணைந்து செபிக்கும்போதுதான் நமது உள்ளங்களில் தூய ஆவியாரின் கொடைகளைப் பெற முடியும். குடும்பத்தில் அமைதி, மகிழ்ச்சி, அன்பு, சமாதானம் நிலை பெறும் என்பதை உணர்ந்திடுவோம்.

செபமாலை ஒரு வெற்றியின் சின்னம் என்பதை திருச்சபையின் வலராற்றில் காண்கின்றோம். அதனால்தான் ஆபத்து வேளையிலும், துன்பமான வேளையிலும், சிக்கலான சூழ்நிலையிலும் நாம் செபமாலை செபிக்கும்போது அன்னை தம் திரு மகனிடம் பரிந்துபேசி வெற்றி தருவார் எனத் திருச்சபை நமக்கு கற்பிக்கின்றது.

செபமாலை மிக எளிமையான செபம். சிறு குழந்தைகளும் வயது முதிர்ந்த தாத்தா பாட்டிகளும் இலகுவில் சொல்லக்கூடிய செபம். தனியாகவும் செபிக்கலாம், கூட்டாகவும் சேர்ந்து செபிக்கலாம். குடும்ப செபத்திற்கு ஏற்றதொரு கருவி. பயணங்களின்போதும் செபிக்கலாம். வேலை செய்யும்போதும் செபிக்கலாம். மௌனத்திலும் செபிக்கலாம். சத்தமாகவும் செபிக்கலாம். பல புனிதர்களின் வாழ்வுக்கு ஆதாரமாக இருந்தது செபமாலை. புனித தந்தை பீயோ கூறுவார்: "செபமாலை எனது நாளாந்த உணவு, ஆன்மீக உணவு".

எனவே, நாம் செபமாலை என்னும் ஆயுதத்தைக் கையில் ஏந்திச் செபிப்போம். அலகையை வெல்வோம். வெற்றி பெறுவோம்.

"மரியே வாழ்க!"

**நீதிமொழிகள் 16:1-2**

"எண்ணங்களை மனிதர் எண்ணலாம்; ஆனால், எதற்கும் முடிவு கூறுபவர் ஆண்டவர்.
மனிதருடைய நடத்தையெல்லாம் அவர் பார்வையில் களங்கமற்றதாய்த் தோன்றலாம்; ஆனால், ஆண்டவர் அவர் உள்ளெண்ணத்தைச் சீர்தூக்கிப் பார்க்கிறார்."

ஆயர் பேருட்திரு. ஜோசப் பொன்னையா ஆண்டகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரப்பம்பழம்

குறுங்கதை – 37

வீக்கேயெம்

அயிரத்து அறுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் பெரியதொரு கல்லூரி அது.

அதிபரும் சில ஆசிரியர்களும் மிகவும் கண்டிப்பானவர்கள்.

அறிஞர் பெருமக்கள் பலரை உருவாக்கிய அறிவாலயம் அது.

அதிபர் தனது அலுவலக அறையிலிருந்து வகுப்பறைகளை மேற்பார்வை செய்யப் புறப்படும்போது, அருகிலுள்ள ஆய்வுகூடச் சுவரில் தனது கைப்பிரம்பால் இரண்டு தட்டுத் தட்டுவார்.

அந்த இரண்டு தட்டுடன் கல்லூரி வளாகம் முழுவதுமே அமைதியில் அடங்கிப்போகும்.

தூர இருந்தே தனது கழுகுக் கண்களால் ஒவ்வொரு வகுப்பறையையும் துருவித் துளாவிக் கொண்டு வரும் அதிபரின் கண்களில் எவனாவது ஒரு மாணவன் தப்பித் தவறியேனும் வாய் திறந்தால் போதும், அதிபர் கால்கள் அந்த மாணவனை நோட்டமிட்டபடியே விரைவு கொள்ளும்.

உள்ளே ஆசிரியர் இருந்தாலும் சரி, இல்லதாதுவிடினும் சரி சட்டென்று வகுப்பறையினுள் நுழைந்து விடுவார்.

ஆசிரியர் இருப்பின், அவரது கவனக் குறைவால்தான் அந்த மாணவன் தன்னை மதிக்காது தப்புச் செய்கிறான் என்ற நினைவு நெஞ்சில் கிளர, ஒப்புதலுக்காகவாவது ஓர் "எக்ஸ்கியூஸ் மீ..." சொல்லாமலே வகுப்பறைக்குள் பிரவேசம் செய்யும் அவரின் குணாதிசயம் பிரப்பம் பழமாக, தாறு மாறாக மாணவன் மேனி மீது விளையாடும்.

இத்தனைக்கும் அவர் இங்கிதம் தெரியாதவருமல்லர். ஆங்கில மொழி மூலம் பி.எஸ்.ஸி செய்த பெருமகன்.

அவனைத் தண்டித்த அதேவேளையில் தலை நிமிரும் ஆசிரியர், தானே தவறு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ததுபோல் துவண்டு சிலிர்த்து, தன்மீதே விழுந்த அடியாக மனம் குமுறுவார்.

'இதுதான் நீங்கள் பாடம் நடத்துகிற இலட்சணமோ?' என்று ஆசிரியர் மீதும் ஓர் அஸ்திரம் பாயும். ஆசிரியரோ விறைப்பாக நிற்பார்.

அதிபரோவெனில்அந்த இடத்தைவிட்டு அகன்று போகும்போதும் மாணவனை ஒரு பார்வை பார்த்து நினைவில் நிறுத்திக்கொண்டே வெளியேறுவார்.

அனைத்து மாணவருக்கும் அவரது குணாதிசயங்கள் அத்துப்படி. அதனால் சிலர் அடக்க ஒடுக்கமாக அமைதியாக அமர்ந்திருப்பர்.

இன்றைய நிலைமைபோல் அன்று அதற்காகப் பெற்றோர் எவரும் போர்க்கொடி தூக்குவதில்லை. மாறாக, 'அடியாத மாடு படியாது. நல்லாய் குடுங்கோ சேர். அப்பதான் இவன் ஒழுக்கமாக வளருவான்' என்று அதிபர் அறைக்கே போய், அவர் செய்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் சில பெற்றோரும் இருப்பதுதான் ஆச்சரியம்.

ஆசிரியை ஒருவரைக் கேலி செய்து மாணவர் மத்தியில் அவமதித்தான் என்பதற்காக ஒரு மாணவன் மீது பிறிதொரு ஆசிரியரால் புகார் கிடைத்தபோது, அந்த மாணவனைக் கூப்பிட்டுத் தனது அறையில் வைத்து மொங்கு மொங்கென்று மொங்கித் துவட்டியெடுத்தார்.

அது போதாதென்று அந்த மாணவனது வகுப்பைக் கடக்கும் போதெல்லாம், ஆசிரியர் எவரும் இல்லாத பட்சத்தில், எவனோ ஓர் அந்நியனைப் பழிவாங்குவதுபோல் பிரம்பைச் சுழற்றி அவன் மேனியெங்கணும் வாட்டியெடுப்பார்.

இத்தனைக்கும் அந்த மாணவனோ,



கர்ப்பமாக இருக்கும் பெண்கள் ஒருவேளைக்கு 5 முதல் 10 குங்குமப்பூ இதழ்களை இரவு பசும் பாலில் போட்டு காய்ச்சிக் குடித்துவர சீதள சம்பந்தமான நோய்கள் நீங்கும். பிறக்கின்ற குழந்தை நல்ல திடகாத்திரமாக இருக்கவும் குங்குமப் பூ உபயோகப்படுகின்றது.

நக சுத்தி வந்து அழுகிப்போன நகங்கள், உடைந்துபோன நகங்கள் போன்றவற்றைக் குங்குமப்பூ, வெண்ணைக் கலவையை நகங்களின் மீது தடவி வர நகங்களைச் சீர்படுத்தி இழந்த அழகை மீட்டுத்தரும்.

நெடிதுயர்ந்து ஆஜானுபாகுவான அதிபருக்கு நிகராக வளர்ந்த நெட்டைமரம் போலிருந்தான். ஆயினும், அவன் அவரைத் தடுத்ததுமில்லை. எதிர்த்ததுமில்லை. அந்தளவிற்கு ஆசிரியர் - மாணவர் பண்பு அந்தக் காலத்தில் விருத்தியடைந்தேயிருந்தது.

பின் நாளில் அவன் ஓர் இராணுவ அதிகாரியாக வந்தபோதும், ஓய்வு பெற்ற அந்த அதிபரை பஸ் ஸ்ராண்டில் கண்டதும், சீருடையுடன் ட்றக்கிலிருந்து இறங்கி,

"ஸேர், எப்படியிருக்கிறீங்கள்? உங்கள் ஆசீர்வாதத்தால்தான் நான் இந்த நிலைக்கு வந்திருக்கிறேன் ஸேர்" என்று கைகூப்பினான்.

அவரோ கண்களில் நீர் மல்க அவன் தோளில் தட்டி, 'உன்னை இப்படிப் பார்க்கும்போது எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது. நல்லாய் இரு ராசா!" என்று வாழ்த்தி விடைபெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனையில் நூற்றாண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த கார்மேல் பற்றிமா கல்லூரியில் கடந்த காலங்களைப் போல ஒரு கத்தோலிக்க துறவியே தொடர்ந்தும் அதிபராகப் பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டுமென்று அப்பிரதேசத்தில் வாழும் அறுநூற்கும் அதிகமான கத்தோலிக்கக் குடும்பங்களோடு, இக்கல்லூரியால் இதுவரை பயனடைந்து மருத்துவம், பொறியியல், சட்டம், அரசியல் என பல்வேறு துறைகளிலும் உயர் பதவிகள் பெற்றும் நாடெங்கிலும் பணியாற்றுபவர்களில் கத்தோலிக்கர்களைவிட இந்து, முஸ்லிம் மதத்தவர்களே அதிகம்.

அவர்களின் வழித்தோன்றல்களே இன்னமும் இக்கல்லூரியில் கற்றுவருகின்றனர். அவர்கள் அத்தனை பேரும் சிலாகித்துப் பேசும்

# கார்மேல் - பற்றிமா கல்லூரிக்கு துறவிகளின் தலைமைத்துவமே அவசியம்




## கல்முனைப் பிரதேசக் கத்தோலிக்கர்களும், பெற்றோரும், நலன் விரும்பிகளும் கோரிக்கை

வந்துள்ள இந்து, முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்களும் கூட ஏகோபித்த வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அண்மைக்காலத்தில் இக்கல்லூரியின் வரலாற்றில் இல்லாதவாறு வேறு மதத்தவர் ஒருவர் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒரேயொரு கத்தோலிக்க கல்லூரியாக (தேசிய பாடசாலை) அறியப்பட்டுள்ள இதில் பயின்று ஆசிரியர்களாகவும், அளவுக்கு, இங்கு அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் பணியாற்றிய கத்தோலிக்க அருட்தந்தையர்களினதும், அருட்சகோதரர்களினதும் அர்ப்பணிப்புடனான கல்விச் சேவை இருந்து வந்துள்ளது.

■- எஸ். ஜோன்ராஜன்

பிற இன, மத மாணவர்களையும், அவர்களின் மதவுணர்வுகளையும், பாரம்பரியங்களையும் மதிக்கும் விதத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு, சமத்துவம் போன்றவை பேணப்பட்டு வந்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்றான் எல்லா மக்களாலும் போற்றப்பட்டும் கண்ணி யப்படுத்தப்பட்டும் வந்திருக்கிறது.


இந்த நிலையில் அயல் மத அதிபரொருவர் நியமிக்கப்பட்டு பல்லாண்டுகாலப் பாரம்பரியமும் மாற்றப்பட்டுள்ளமையானது, கல்லூரி நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரையும் அதிர்ச்சியும், விசனமும டைய வைத்துள்ளது.

இன்றைய கார்மேல் - பற்றிமா கல்லூரி யானது, கடந்த 1900ஆம் ஆண்டில், இப்போது கல்முனையில் திரு இருதயநாதர் ஆலயம் அமைந் துள்ள வளவில் சென்.மேரிஸ் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. அந்நாளில் கல்முனை யில் கத்தோலிக்கர்கள் குறைவு. இந்துக்களின் விகிதா சாரமே அதிகம். இவர்கள் அனைவருக்கும் ஆங்கிலக் கல்வியை ஊட்டவே மேல் நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த துறவிகளைக் கொண்டு கத்தோலிக்கத் திருச்சபையால் ஸ்தாபிதம் செய்யப்பட்டது.

நாளடைவில் மாணவர்களின் தொகை பெருகி, இடமும் போதாமையால் தற்போது கல்லூரி அமைந் துள்ள காணியில் துறவிகளின் மடத்தோடு சேர்த்துப் பெரிதான வகுப்பறைக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டு கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் தொடரப்பட்டதாக இங்குள்ள திருஇருதயநாதர் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி. அன்ரனி லீயோ அடிகளார் தெரிவிக்கிறார்.

பின்னர் 1926இல் இதனயலில் கார்மேல் கன்னியர் மடம் மேனாட்டு அருட்சகோதரிகளால் ஆரம்பிக்கப்பட்டு, அதனொரு பகுதி பெண்கள் பாட சாலையாகவும் இயங்கி வந்தது. இதுவே கல்முனை யில் பெண்கள் மத்தியில் ஆங்கிலக் கல்வியூட்ட ஏற்படுத் தப்பட்டுள்ள முதலாவது பெண்கள் பாடசாலையாகும்.

அந்நாளில் போர்த்துக்கல் தேசத்தில் தேவதாயார் ஒரு மலைச்சாரலில் ஆடு மேய்க்கும் சிறுவர், சிறுமியர் மூவருக்குத் தரிசனம் தந்து நல்லு பதேசம் செய்த சம்பவமானது உலகெங்கும் வியந்து பேசப்பட்ட ஓர் அற்புதமாகும். “பற்றிமா” எனும் இடத்தில் காட்சி தந்ததால் பற்றிமா அன்னையென அவள் அழைக்கப்பட்டாள். அந்த அன்னையின் திருச்சொரூபம் போர்த்துக்கல்லிலிருந்து உலகில் கத்தோலிக்கர் வாழும் நாடுகளுக்கெல்லாம் பவனி யாகக் கொண்டுசெல்லப்பட்டது. 1952ம் ஆண்டில் அது இலங்கைக்கும் கொண்டுவரப்பட்டபோது, கல்முனை யில் வாழும் கத்தோலிக்கர்களாலும் அதற்கு மகத்தான



# எனைப் போற்றி நின்ற ஆசானுக்கு

இயேசு சபைத் துறவியே
மலையகத்து மைந்தனே,
உருவாக்கும் நல் ஆசானாய்
தட்டிக் கொடுக்கும் வழிகாட்டியாய்
ஓய்வில்லா உழைப்பாளியாய்
புனே நகர் பயிற்றுவித்த
அழகான வண்ண ஓவியனாய்
கரிசனை கொண்ட குருவாய்
காணும் போதெல்லாம்
அரவணைக்கும் அன்புள்ளத்துடன்
புன்னகைத்து வரவேற்கும்
நண்பனாக நான் கண்டேன்!
புனித மிக்கேல் கல்லூரியில் பின்னர்
தூய செபஸ்தியார் ஆலயத்தில்
மன்ரேசா தியான சாலையில் என்று
நீ அறம் செய்யக் கண்டோம்.
எந்த ஒரு விடயமாயினும்
பல்முனை நோக்கில் பார்த்து
தீர்வு காண்பது உன் ஆற்றல்!
முக்தியின் முதல்வோன் உன்னைத்
தன் நிழலிலே வைத்து உன்
நெஞ்சத்து சுமைகளை
ஆதரவாய் இறக்கி வைக்க வேண்டும்.
உன் திருமுகம் காணும்
வாய்ப்பில்லா நிலையில் நானும்
அகவணக்கம் புரிந்து தந்தையே
நெஞ்சில் என்றும் கொண்டு வாழ்வேன்!

ஆனந்தா ஏஜீ. இராஜேந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்பளிக்கப்பட்டது. அத்துடன் அவ் வருகையின் உரிய ஞாபகார்த்தமாக சென் மேரிஸ் பாடசாலையும் பற்றிமா பாடசாலையாக மாற்றப்பட்டுத் தொடர்ந்து கத்தோலிக்கத் திருச்சபையால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.


இதன் பின்னர் 1960ல் நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்ற போது, நிர்வாக இலகு கருதி, கார்மேல் - பற்றிமா பாடசாலைகளை ஒன்றிணைத்து 'கார்மேல் - பற்றிமா கல்லூரி' என மாற்றப்பட்டதாக அருட்தந்தை. லீயோ மேலும் விபரம் தெரிவிக்கிறார்.

பொதுவாக மதம் சார்ந்த பாடசாலைகளில் அந்தந்த மதத்தவர்களே அதிபர்களாக இடம்பெறுவது அந்த மதத்திற்குக் கொடுக்கக்கூடிய கௌரவமும், தென் தனித்துவத்தை மேலும் பேணக்கூடியதுமாகும். இலங்கையிலுள்ள கத்தோலிக்க மதம் சார்ந்த பழம் பெரும் கல்லூரிகளில் இன்றளவும் இதுவே நடந்துவருவது கண்கூடு. அதே பாரம்பரியத்தைக் கொண்ட இக் கல்லூரியின் கல்வித்தரம் முன்பு போல் ஓங்க வேண்டுமானால் அதற்கு அர்ப்பணிப்பும், தியாக குணமும் கொண்ட கத்தோலிக்கத் துறவியொருவரின் கீழேயே தொடர்ந்தும் இயங்கி வருவது அவசியமென இங்கு பயிலும் மாணவர்களின் பெற்றோரும், கல்விமான்களும், நலன்விரும்பிகளும் வற்புறுத்துகின்றனர். பல மத மாணவர்கள் படித்தும், ஒரு நூற்றாண்டு கடந்தும் இதுவரை இன, மத முரண்பாடுகள் எதுவும் தலைதூக்காத ஒரே பாடசாலை தென்கிழக்கில் இது ஒன்று தான்! ஏற்கனவே பல இறப்பு, இறப்பு நெருக்கு வாரங்களால் நொந்து போயுள்ள தமிழினம், இதுபோன்ற பிரச்சினைகளால் பிரிந்து நின்று செயற்படாது, இனத்தின் பெயரால் ஒற்றுமைப் பட்டு, கல்லூரியை முந்திய முறையிலே கொண்டு நடத்த ஆவன செய்ய வேண்டுமென சம்பந்தப்பட்ட அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

# குருத்துவப் பொன்விழா நாயகனை வாழ்த்துகின்றோம்

அருட்கலாநிதி. டொமினிக் சாமிநாதன் அடிகளார் 2017ம் வருடம் ஆவணித்திங்கள் 24ம் நன்னாளில் தமது குருத்துவப் பொன்விழாவைக் கொண்டாடினார். எமது மறைமாவட்டத்தின் மூத்த குருக்களில் ஒருவராக மிளிரும் இவர் தமது எழுபத்தைந்தாவது அகவையிலே இப்பொன் விழாவைக் கொண்டாட இறையாசிர் மிகையாகப் பொழியப்பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது. கல்வியையே கருந்தனமாகக் கொண்ட இவர், "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கேற்ப பலரையும் கல்வியிலும், மறைவாழ்விலும் ஊக்கமளித்து உயர்த்திவிட்டவர். இவர் இருக்கும் இடத்தில் கலகலப்பிற்குப் பஞ்சமேயில்லை. ஆழமான கருத்துகளால் பிறரைக் கவரும் சிறப்பு இவருக்குரியது. சாமிநாதன் என்ற பெயரிலேயே இறைவனுக்குத் தன்னை நாதன், தாசன் ஆக்கிய பொருளை இவர் வாழ்விற்கொண்டார் என்பதற்கு ஐயமில்லை.

இவரையறியாதோர் யாருமேயில்லை எனலாம். கத்தோலிக்க உலகு மட்டுமல்ல பிற சமய, பிற இனத்தவரில் கூடப் பலருக்கு இவரைத் தெரியும் என்றே கூறலாம். பல்சமய உரையாடலை முன்னெடுத்துச் சென்றவர். பிற கிறிஸ்தவ சபையாருடன் இணைந்து ஒன்றிப்பு வார நிகழ்வுகளுக்கு வழிகாட்டியவர். பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தவர், பல நூல்களை எழுதியவர், பல குருக்களை உருவாக்கியவர் என்று இவர் பணிகள் எண்ணிலடங்கா. இவரது பொன்விழாவில் நாமும் பங்குபற்ற அருள் பெற்றுள்ளோம். அவரது குருத்துவ அர்ப்பண வாழ்வின் பொன்விழாவை நிறைவு செய்யக் கருணை புரிந்த இறையவனுக்கு இவ்வேளையில் நன்றி கூறுவோம். 50 வருடங்களில் நூற்றாண்டுக்குரிய பணிகளை நிறைவுடன் செய்துள்ள எமது அன்புக்கும், பெருமதிப்பிற்கும் உரிய பொன்விழா நாயகன் அருட்கலாநிதி. டொமினிக் சாமிநாதன் அடிகளாரை வாழ்த்துவதுடன் தொடரும் பணிக்கு இறையருள்தனையும் வேண்டுகின்றோம்.



மற்றில்டா இராஜேந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலொடு அமைதி பெறும் உலகம்

அருட்பாவலர் நிலா தமிழின் தாசன்


இரக்கத்தின் உறைவிடமாய் உள்ளம்
இருப்பதுவே மனிதகுலத் தழகு
அரக்கரினம் இன்றில்லா உலகம்
அழகென்பர் ஆனாலும் மனத்துள்
இருக்கின்றார் என்பதனைக் காட்டும்
ஈன மத வெறியர்களின் ஆட்டம்
அரிதான மழலையர் பெண் முதியோர்
அடுக்கடுக்காய் கொல்பவர்கள் அரக்கரிலும் கொடிதாம்

“மியன்மாரின் ரோகிங்யா” மண்ணில்
மிலேச்சர்கள் போடும் வெறியாட்டம்
இயம்பிமனம் ஆறாது துயரம்
இவர்களெல்லாம் மனுக்குலத்தின் கழிவாம்!
பயமறவே அற்றவர் செய் கொடுமை
பாரதனைத் துயர் நெருப்பில் வாட்டும்
தயவறவே இல்லாத செயல்கள்
தான் திருந்தும் நாள் என்று மலரும்?

ஓர் குலம்யாம் மனிதரெலாம் என்றும்
உயர்வான எண்ணமது தானோங்கி வளர்ந்தால்
சீர்கொண்டு மண்ணுலகம் சிறக்கும்
சிந்தனையில் நல்லுணர்வு பிறக்கும்
போர் பொருதி மாயாமல் தூய
புரிந்துணர்வோ டன்பு கொண்டு கூடி
வேர் விட்டுத்தான் செழிக்கும் இனிதாய்
விடியலொடு அமைதிபெறும் உலகம்.

கல்லுத் தடுக்கி விழும் போது தனியே
தன்னைக் குறை யெதுவும் கூறாமலே
கல்லில் பாரம் போட்டுத் தன் குறை மறைத்தே
அமைதி கொள்கிறான் மனிதன் அவனியிலே.

– ராஜ் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிவிழா வாழ்த்துக் கவிமாலை



கடந்த 21.09.1992ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு
21.09.2017ல் 25 வருட நிறைவின்
வெள்ளிவிழா கொண்டாடும் அருட்பணி. ஜோசப்
இக்னேசியஸ் சந்திரா அடிகளாரைக் கௌரவித்து
அளிக்கப்படும் கவிமாலை

ஆக்கம் : கலைக்கோட்டன் அ. இருதயநாதன்

விருத்தம்

ஆதியே இறைவா போற்றி,
அவர் தம் சுதனே போற்றி,
ஆவியே உமையே ஓதி,
அடியேனும் தோத்தரித்தேனே!

வெள்ளிவிழா நாயகன்
அருட்பணி சந்திரா அடிகளார்க்கு
தெள்ளிய தமிழ்க் கவிதை
தேனக நாட்டிலே தந்தேன்

ஜோசப், செபமாலை
ஜோடி சேர்ந்தே பெற்ற பிள்ளையிவர்
சூசை மகன் இயேசு வழியிலே
சோர்வின்றியே செல்கின்றாரே

பத்தொன்பது ஐந்து ஐம்பத்தாறிலே
பிறந்து புனித மிக்கேலில் கற்றார்
கொழும்புத்துறை, கண்டி தேசிய
குருமடங்களில் குருத்துவக் கல்வி!

இருபத்தொன்று ஒன்பது தொண்ணூற்று இரண்டில் குருவானார்
பங்குப் பணித்தளங்களோ பல பல
திருகோணமலை மூதூர் தாழங்குடா
அக்கரைப்பற்று ஆயித்தியமலை
வந்தாறுமூலை அத்துடனே
இந்தியாவின் கேரளாவில்
டிவைன் தியான இல்லம்:

விண்ணிலே ஒளிரும் நட்சத்திரங்களோ
இலட்சாதி இலட்சமாகும்
அவைகளுக்கு தலைச்சனே சந்திரன்:
அதேபோன்று இங்கே எமது சந்திரா குருவாகும்.
ஏன் தெரியுமா!
ஈழ யுத்தம் தீயினை கக்கியபோது
அதிலகப்பட்டு கருகி வெட்டுண்டு

துடி துடித்து மரணித்து
உயிர்த்தெழுந்த உத்தமன் இவர்
இன்னுமாக மூதூரில் பச்சநூல் பணித்தளத்தில்
இராணுவ சீருடை அணிந்தோர்
இவரது முகத்தை வாளால் பிளந்தனர்.

குருதி ஆற்றில் மிதந்த குரு இவர்
யுத்த வடுவை சுமக்கும் குரு இவர்
இவரல்லோ வேதசாட்சி
எமது கண்ணெதிரே மண்ணெதிரே
விண்ணதிரும் செபத்தினாலே
லூசிபர் சேனைகளை விரட்டும்
மிக்கேலின் புதல்வர் இவர்.

இலங்கையின் எட்டுத் திக்கும் சென்று
நோயுடன் பேயையும் விரட்டி அடிக்கும் வீரர்
இவர்
பன்சாலை அருகே பாலகர்களை
கொன்று குவித்ததைக் கண்ட
கண் கண்ட சாட்சி இவர்
அதனால்
சீலோமில் சத்திரசிகிச்சைக்காக
உட்படுத்தப்பட்ட குருவை
சதிகாரர் கடத்த முற்பட்ட வேளை
புதுமைமிகு அந்தோனியார் கிருபையால்
அங்கிருந்து காப்பாற்றப்பட்டார்
இது யுத்த காலத்தில்
மட்டு நகரில் நடந்த புதுமையிது!

சிறகையடித்துப் பறந்த பறவையிவர்
இன்று கூட்டிற்குள் முடங்கவில்லை
சீற்றங் குறையாத சிங்கமிவர்
ஏழையர்க்கு இரங்கி உதவும்
கலியுக கர்ணன் இவர்

தாழை நறுமலர் ஊரெல்லாம்
மணம் வீசுவது போல்
நாளெல்லாம் இவர் புகழ் மணக்க
நல்லாயன் யேசு அருள் புரிவாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகெங்கும் மரியாளின் புகழ்... 30

## சாத்தியமாக்கும் அன்னை: செர்ரா லிமா, பிரேசில் :



பதினெட்டாம் நூற்றாண்டில், சுமார் 1758ஆம் ஆண்டில், கர்னல் அன்டோனியோ பெரெய்ரா டி லிமா என்பவர், அப்ரூ பெரெய்ரா மற்றும் அவரது மனைவியொடு சேர்ந்து போர்த்துக்கல்லிலிருந்து, சாத்தியமில்லாதவற்றை சாதிக்கச் செய்யும் அன்னையின் திருவுருவத்தை எடுத்து வந்தார். அன்னையை மகிமைப்படுத்தும் வகையில், ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்காக நிலத்தைத் தானமாக வழங்கினார். தற்போது, இந்த ஆலயமானது, பிரேசிலின் 13வது பசிலிக்கா என்ற கௌரவப் பட்டத்தைத் தாங்கியிருக்கிறது. மற்றும் ரியோ கிராண்டு டோ நார்ட் என்ற மாநிலத்தின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாகவும் இது கருதப்படுகிறது. அத்துடன், வடகிழக்கு பிரேசிலில் ஏராளமான விசுவாசிகள் புனிதப்பயணம் மேற்கொள்ளும் புனித தலமாகவும் இது திகழ்கிறது.

# எண்ணிப்பார்க்கையில்...

சுய மரியாதை என்பது
பெரும்பாலானோர்க்கு உயிருக்கு
உயிரானது!
'மதியாதார் தலைவாசல்
மிதிக்காதே'
என்ற ஔவையின் வாக்கு
அவர்க்கெல்லாம் முக்கியமானது;
இதனால் நம்மை யாரும்
மதிப்பதில்லை என்றால்
நாமும் அவரைக்
கணக்கிலெடுப்பதில்லை!
சரியாக எண்ணிப்பார்க்கையில் .....
நம்மை மதிப்பார் தம்மை மதிக்க
வேண்டும்;
அதுபோல நம்மை மதிக்காதார்
தம்மையும் நாம் மதிக்க வேண்டும்!
மற்றவர் செயல்கள் நம் வழியை
நிர்ணயிக்க ஒரு போதும்
அனுமதிக்கக் கூடாது!
நாம் நம்மைத் தானே பிரதிபலிக்க
வேண்டுமேயல்லாது
அடுத்தவரை அல்ல!
நமது நற்பண்புகளை பிறர்
செய்கைகளால் நீர்த்துப் போகச்
செய்வது நம் அழகைப்
பாழடித்துப்போடும் என்பது
நெஞ்சுக்குப் புலனாகும்!



சுய மரியாதை

ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்

"எல்லோரையும்
திருப்திப்படவைக்க
நினைப்பவனால்
வாழ்க்கையில் வெற்றிபெற
முடியாது"

- லெனின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கத்தோலிக்கத் திருமறை மாணவர் பக்கம்

## க.பொ.த. (உயர்தரம்)

நிலமினி கஜேந்திரன்

### மேற்கத்திய சபை தொடர்ந்தும் பிளவுபடல்:

கத்தோலிக்கத் திருச்சபையில் இருந்து பிரிந்த புரட்டஸ்தாந்து லூத்தரன் பிரிவினைச் சபையைத் தொடர்ந்து சுவிங்ளியின் புரட்சி (1484 – 1511) வெடித்தது. இவர் சுவிற்சலாந்து எனும் ஊரிலுள்ள ஓர் உழவர் குடும்பத்தில் 1484 தை 1ம் திகதி பிறந்தவராவார். குடும்பத்தில் ஒன்பது பிள்ளைகளில் இவர் மூன்றாவது குழந்தையாவார். இவர் தன் ஆரம்பக்கல்வியினை பார்த்தலோமேயு எனும் குருவான தன் மாமனாரின் கீழ் வெஸ்ஸன் எனும் இடத்தில் கற்றார். பின்னர் பாசேல் எனுமிடத்தில் நடுவர் கிரகோரியின் கீழ் இலத்தீன் மொழியினைக் கற்றார். டொமினிக்கன் சபையினர் தமது சபையில் இவரை இணைக்க விரும்பினார். ஆனால், வியன்னா பல்கலைக்கழகத்தில் இணைந்து, உயர்கல்வியை மேற்கொண்டார். 1506இல் முதுமாணிப் பட்டம் பெற்ற இவர், சிறிது இறையியல் கற்றபின் 29 புரட்டாதி 1506 இல் குருவாய் திருநிலைப்படுத்தப்பட்டார். கிளானுஸ் நகரில் 10 ஆண்டுகள் பணியாற்றிய பின் சுவிற்சலாந்து படைவீரர் மத்தியில் ஆன்மீகக் குருவாய்ப் பணியாற்றினார்.

மேலும், சீர்திருத்தச் சிந்தனையுடைய இவர் லூத்தரின் போதனைகளை விரும்பிக் கற்றார். பிரிவினை மதம் பற்றிப் போதிக்கத் தொடங்கினார். படிப்படியாய் சுவிற்சலாந்து மத இயக்கத்தின் தலைவராய் மாறினார். இதனால், 1516இல் தேவதாய்க்கும், திருப்பயணத்திற்குமெதிராய்ப் போதிக்கலானார். இதனால் கொதித்தெழுந்த மக்கள் இவரைப் பங்கிலிருந்து விரட்டிவிட்டனர். எனவே, 1519ல் சூரிச் பட்டணம் சென்று குரொஸ்மன்ஸ்ரர் பங்கில் பணியாற்றினார். மிகச் சாதுரியமான முறையில் போதகராகிய இவர், இங்கு மக்கள் மத்தியில் தப்பான முறையில் போதகத்தினை எடுத்துரைத்தார். 1522இல் தவக்காலத்தில் நோன்பிருத்தல் முறையினை விமர்சித்தார். திருவிவிலியத்தின் அதிகாரத்தை வலியுறுத்திய இவர் காலப்போக்கில் திருவிவிலியத்தால் உறுதிப்படுத்தப் படாத சமயக் கோட்பாடுகளை நிராகரித்தார். குருத்துவ வார்த்தைப்பாடுகள், குருக்களின் பிரம்மச்சாரியம், புனிதர்களின் பரிந்துரை, உத்தரிப்பு ஸ்தலம் பற்றிய படிப்பினைகளை எதிர்த்தார். ஏனைய குருக்களும் தன்னைப்போல உலக இச்சைகளால் வருந்துகிறார்கள் எனக் கூறிய இவர், ஆனா றெயின் காட் என்ற விதவையைத் திருமணம் செய்து ஆயர்கள் தாங்கள் திருமணம் செய்யத் தடைவிதிக்கக்கூடாது என்றார். எந்தவொரு திருவருட்சாதனமும் அருட்கொடைகளை வழங்குவதில்லை, அவை வெறும் அடையாளங்கள் மட்டுமே என்றார். நற்கருணையில் இயேசு இல்லை எனவும், அது இயேசுவின் மரணத்தின் அடையாளம் மட்டுமே எனவும் போதித்தார்.

சூரிச் நகர சபை இவருக்கு ஆதரவு அளித்ததால் அங்கிருந்து பல ஆலயங்களுக்குச் சென்று பீடங்களையும், சொரூபங்களையும் உடைத்தார். படங்களைக் கிழித்தெறிந்தார், நற்கருணை விருந்திற்கு ஒரு மேசை மட்டுமே வைத்தார். திருப்பலிக்குப் பதில் எளிய நற்கருணை வழிபாடு அறிமுகம் செய்யப்பட்டது. சுவிங்ளி அதிகமாய் லூத்தரின் கொள்கையைப் பின்பற்றினாலும் நற்கருணை பற்றிய கொள்கையில் இருந்து வேறுபட்டார். இவர் நற்கருணையில் இயேசுவின் உண்மைப் பிரசன்னம் அல்ல நினைவுப் பிரசன்னமே இருப்பதாய்ப் போதித்தார். நற்கருணை பற்றிய இருவரின் கருத்தினை விவாதிப்பதற்காக 1520ல், மார்பர்க் எனுமிடத்தில் கூடி விவாதித்தனர். ஆனாலும் முடிவு ஏற்படவில்லை. "இது என்னுடைய உடல்" எனும் வேதப்பகுதியில் இருவரும் முரணான கருத்தினையே கொண்டிருந்தனர்.

சுவிங்ளியின் போதனைகளை ஏற்றுக்கொண்ட சுவிற்சலாந்து மக்கள், ஏனைய மாகாணங்களிலும் வலுக்கட்டாயமாக இப்போதனைகளைப் புகுத்திவிட்டனர். இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறிப்பு:

"தொண்டன்" சஞ்சிகையில்
வரும் போட்டிகளில்
பங்குபற்றுவோரில் பரிசு
பெறும் சிறுவர், சிறுமியர்
எமது அலுவலகத்திற்கு
அண்மையில்
வசிப்பவராயின் நேரடியாக
வந்தும் பரிசுத் தொகையைப்
பெற்றுக்கொள்ள முடியும்
என்பதை
அறியத்தருகின்றோம்.




## விபத்து


தெருக்களிலே வாகனத்தின் நெரிசல்
தினந்தோறும் பலநூறு உரசல்
உருக்குலைந்து உடல் சிதைந்து
உயிரிழத்தல் தொடர்கதையாம்
இதுக்கெவர்தான் முடிவுரையை வரைவார்.....?

யறிந்த கத்தோலிக்க மாகாணங்களான ஸ்வீ, ஊரி, அன்டரவால்டன், லூசர்ன, ஸஷக் என்பன ஒன்று கூடி காப்பல் எனுமிடத்தில் 1531ல் பிரிவினை மத வெறியர்களை முறியடித்தனர். இதில் 1531 ஐப்பசி 11ம் நாள் சுவிங்ளி கொல்லப்பட்டார்.

**இவரின் முக்கிய கருத்துக்களாவன :**

விசுவாசத்தின் ஒரே சத்தியம் விவிலியம். எனவே, யாரும் மனதிற்குத் தோன்றியவாறு இதற்கு விளக்கமளிக்கலாம். விவிலியத்தின் அதிகாரத்தை வலியுறுத்திய இவர் உறுதிப்படுத்தப்படாத சமயக் கோட்பாடுகளை நிராகரித்தார். ஜென்ம பாவம் மனிதனின் சுய விருப்பத்தை அழித்து அவனைத் தீமை செய்வதிலேயே நாட்டம் கொள்ளச் செய்கிறது. திருவருட்சாதனங்கள் வெறும் அடையாளங்கள் மட்டுமே. குருக்கள் திருமணம் செய்யத் தடை விதிக்கலாகாது போன்றவையாகும்.

# சிந்தனைக்கு சில நிமிடங்கள்



**மனிதர்களாய் மதியுங்கள் .....**

வேலைக்கு ஆள் கிடைக்காத வேளையில்கூடத் தன்னிடம் பணிபுரிபவர்களைத் தக்கவைக்கும் தொழிலதிபர் ஒருவரை பத்திரிகையாளர் ஒருவர் சந்தித்து அது பற்றிக் கேட்டார். "என்னிடம் பணிபுரிபவர்களின் தகுதிக்குறைபாடுகளுக்கோ, செயல்திறன் குறைபாடுகளுக்கோ அவர்களை நான் கடிந்து கொள்வதில்லை. இன்னும் சிறந்த திறன்கள் இருந்திருந்தால் இன்னும் சிறந்த நிறுவனத்தில் சேர்த்திருப்பார்கள். எனவே, பொறுத்துக்கொள்கிறேன். பொறுமையாய்த் திருத்துகிறேன். அதைவிட அவர்களை மனிதர்களாய் மதிக்கிறேன்' என்றார் தொழிலதிபர்.

**குடும்பம் நேசிப்பதால் ....**

தன் தோற்றம் குறித்தும், திறமைகள் குறித்தும் தாழ்வு மனப்பான்மை கொண்டிருந்தாள் அந்தச் சிறுமி. "நீ அழகாய் இருக்கிறாய், உன்னை நேசிக்கிறேன்" என்று அவளிடம் தந்தை அடிக்கடி சொல்லி வளர்த்தார். அவளது மனம் மெல்ல மெல்ல மாறியது. ஊக்கம் உயர்ந்தது. உருவத்திலும் மாற்றங்கள் தென்பட்டன. அழகிலும், அறிவிலும் தனித்தன்மை மலரும் விதமாய் வளர்ந்தாள். பதினெட்டாவது பிறந்த நாளில் பரிசு வழங்கிய தந்தை சொன்னார், "நீ அழகான குழந்தை, உன்னை நேசிக்கிறேன்". அவள் தோழிகளிடையே அறிவித்தாள், "நான் அழகாய் இருப்பதால் என் குடும்பம் என்னை நேசிக்கவில்லை. என் குடும்பம் என்னை நேசிப்பதால் நான் அழகாய் இருக்கிறேன்".

- ஜே.எஃ.இரத்தினராஜா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம்

## நாம் உண்ணும் உணவுகளில் ஆபத்தை விளைவிக்கும் இரசாயனங்கள்

நாம் உண்ணும் உணவுகள் அனைத்தும் நமக்கு நன்மையை மட்டும் தான் விளைவிக்கும் என்று நினைத்தால் அது தவறு. நாம் உண்ணும் ஒவ்வொரு உணவிலும் உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் குறிப்பிட்ட ளவு இரசாயனங்கள் இருக்கின்றன. இந்த உணவுகளைத் தவறான முறையில் சாப்பிட்டால்தான், ஆபத்தை விளைக்கும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

**உருளைக்கிழங்கு:** பெரும்பாலானோருக்குப் பிடித்த உருளைக்கிழங்கில் விஷமானது தண்டு மற்றும் இலைகளில் தான் இருக்கும். உருளைக்கிழங்கு பச்சையாக இருந்தால், அதில் க்ளைக்கோ அல்கலாய்டு என்னும் விஷம் நிறைந்திருக்கும். அப்போது அதனை உட்கொண்டால், உடலின் சக்தியானது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, கோமா வரை கொண்டு செல்லும்.


**தக்காளி:** தக்காளியில் க்ளைகோ அல்கலாய்டு என்னும் விஷமிக்க இரசாயனம் நிறைந்துள்ளது. அதுவும் இது தண்டு மற்றும் இலைகளில் தான் இருக்கும். ஒரு வேளை அதன் தண்டு அல்லது இலையை சாப்பிட்டால், அது நரம்புத் தளர்ச்சியை உருவாக்குவதோடு, வயிற்று உப்புசத்தை அதிகரிக்கும்.

**அப்பிள்:** தினமும் ஒரு அப்பிள் சாப்பிட்டால், ஆரோக்கியமாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் சொல்வார்கள். ஆனால், அந்த அப்பிளின் விதையை சேர்த்து சாப்பிட்டால், வாழ்நாளின் எண்ணிக்கை தான் குறையும். ஏனெனில், அப்பிளின் விதையில் சையனைட் என்னும் ஆபத்தான விஷம் உள்ளது.

**செர்ரி:** செர்ரிப் பழங்களில் இலை மற்றும் விதைகளில் விஷத்தன்மை உள்ளது. அதுமட்டுமின்றி, அடுத்த முறை ப்ளம்ஸ், அப்ரிக்காட் மற்றும் பீச் போன்றவற்றைச் சாப்பிடும்போது, அதன் விதையை வாயில் போட்டு மெல்ல வேண்டாம்.

**பாதாம்:** கசப்புத் தன்மை கொண்ட பாதாமைச் சாப்பிட்டால், அதில் சையனைட் உள்ளது என்று அர்த்தம். ஆகவே, பாதாமைப் பச்சையாக சாப்பிடுவதை விட, அதனை ஊற வைத்து அல்லது வறுத்துச் சாப்பிடுவதுதான் சிறந்தது. இதனால் அதில் உள்ள விஷம் வெளியேறிவிடும்.

**காளான்:** காளானில் நிறைய வகைகள் உள்ளன. அதில் சில காளான்களில் விஷமானது அதிக அளவில் இயற்கையாகவே நிறைந்துள்ளது. ஆகவே, காளான் வாங்கிச் சாப்பிடும்போது, சரியான காளானை தேர்ந்தெடுத்துச் சாப்பிடுங்கள். இல்லாவிட்டால், உயிரை விட நேரிடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான் செய்திகள்

**க**டந்த 18 மாதங்களாக இஸ்லாம் தீவிரவாதிகளால் கடத்திவைக்கப்பட்டிருந்த, இந்திய அருள்பணியாளர் டொம் உழுன்னலில் (Tom Uzhunnalil) அடிகள், விடுதலை செய்யப்பட்டுள்ளதற்குத், தனது நன்றியைத் தெரிவித்துள்ளது திருப்பீடம். 2016ம் ஆண்டு மார்ச் 4ம் தேதி ஏமன் நாட்டின் ஏடனில், புனித அன்னை தெரேசாவின் பிறரன்பு மறைப்பணியாளர் சபையின் முதியோர் இல்லத்திலிருந்து கடத்தப்பட்ட சலேசிய சபை அருள்பணி. டொம் அடிகள், செப்டம்பர் 12, ஓமன் நாட்டில் விடுதலை செய்யப்பட்டார்.

58 வயது நிரம்பிய, கேரளாவைச் சேர்ந்த, சலேசிய அருள்பணியாளர். டொம் உழுன்னலில் அடிகள், ஏமனில் மறைப்பணியாற்றி வந்தார். இவர் மறைப்பணியாற்றிய பங்கு ஆலயம், குண்டுவீச்சால் சேதமடைந்ததை யொட்டி, ஏடனில், அன்னை தெரேசாவின் பிறரன்பு மறைப்பணியாளர் சபையின் முதியோர் இல்லத்தில்



தங்கி மறை பணியாற்றி வந்தார். இஸ்லாம் தீவிரவாதிகள், 2016ம் ஆண்டு மார்ச் 4ம் தேதி, அந்த முதியோர் இல்லத்தைத் தாக்கியதில் அன்னை தெரேசா சபையின் நான்கு அருள்சகோதரிகள் மற்றும் 12 பேர் கொல்லப்பட்டனர். அச்சமயம் இவரும் கடத்தப்பட்டார்.



குடும்பத்திற்கு ஆதரவாக மெக்சிக்கோவின் 125 நகர்களில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அமைதி ஊர்வலம் நடத்தினர். குடும்பம் என்ற அமைப்பிற்கு மக்கள் வழங்கும் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது என்றனர் தலத் திருஅவை அதிகாரிகள்.

ஒரு குடும்பத்தின் அடிப்படை அல்லது துவக்கம் என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே உருவாகும் திருமண ஒப்பந்தம் என்பதை உறுதிசெய்ய முயலும் திருஅவை, ஒரே பாலின நடவடிக்கையாளர்களுக்கு எதிராக செல்கிறது என்று தவறாக அர்த்தம் கொள்ளக் கூடாது என்றார், அந்நாட்டின் Zacatecas ஆயர் Sigifredo Noriega Barcelo.

ஒரே பாலின நடவடிக்கையாளர்களின் உரிமைகள் மதிக்கப்படுகின்றன, ஆனால், அதற்காகத் திருமணம் என்பதன் உண்மைத் தன்மையை மறுக்கவோ, இழக்கவோ முடியாது எனவும் கூறினார், ஆயர் Barcelo. மெக்சிகோ ஆயர், Pietro Pablo Elizondo அவர்களின் கூற்றுப்படி, மெக்சிக்கோவின் 75 விழுக்காட்டு மக்களுக்கு, குடும்பமே முதன்மை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**நா**ட்டைக் காக்கிறோம் என்ற பெயரில், அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசு, முன்னேற்றத்தை நோக்கிய வழியில் பின்னோக்கிச் சென்றுள்ளது மட்டுமல்லாமல், விவிலியப் பாதையை விட்டும் விலகியுள்ளது என்று அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆயர் பேரவை கூறியுள்ளது. பரக் ஒபாமா அவர்கள் அரசுத்தலைவராக இருந்த வேளையில், குழந்தைகளாக, இளையோராக அமெரிக்க ஐக்கிய நாட்டை அடைவோருக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் உருவாக்கிய DACA என்ற திட்டத்தை, தற்போதைய அரசுத் தலைவர் டொனால்டு டிரம்ப் அவர்கள் நீக்க முடிவு செய்துள்ளதை, ஆயர்கள் வன்மையாகக் கண்டனம் செய்துள்ளனர். ஒபாமா அவர்களின் திட்டத்தின்படி, அமெரிக்க ஐக்கிய நாட்டில் தஞ்சம் புகும் இளையோர், தங்கள் கல்வியைத் தொடரவும், வேலை வாய்ப்புக்களைத் தேடிக்கொள்ளவும் வசதிகள் செய்து தரப்பட்டதை, தற்போதைய அரசு நீக்குவதாக, செப்டம்பர் 5 அன்று அறிவித்திருப்பது, இளையோரின் உள்ளங்களை நொறுக்கும் ஒரு முயற்சி என்று ஆயர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஆயர் பேரவைத் தலைவர், கர்தினால் டானியல் டினார்டோ, துணைத் தலைவர், பேராயர் ஹோராசே கோமஸ் மற்றும் ஏனைய ஆயர்கள் இணைந்து கையொப்பமிட்டுள்ள இந்த அறிக்கையில், டிரம்ப் அவர்களின் அரசு, மிகக் குறுகிய கண்ணோட்டத்துடனும், எவ்வித இரக்கமும் இன்றியும் செயல்படுவது வேதனையைத் தருகிறது என்று கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலேயிருந்து வைகையேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளர்கின்றாள்
(வில்லி பாரதம் - பாயிரம்)

# தமிழ்த்தாயின் 'தனி' வரலாறு

## - சில குறிப்புகள்

■ வாகரைவாணன் -



இன்றைய ஈராக் (மெசபத்தேமியா) நாட்டின் தென்புறமாக சுமேரியா என்னும் நாடு (கி.மு. 5000) புகழ் பெற்று விளங்கியது. இந்நாட்டு மக்களும் (சுமேரி யர்) திராவிடரும் (தமிழர்) ஒரே இனத்த வராக இருந்திருக்கக்கூடும். (THE SUMERIANS MAY POSSIBLY HAVE BEEN RELATED TO THE DRAVIDIANS) என்று FACT FINDER (PAGE - 844) என்னும் ENCYCLOPEDIA கூறும்.

இற்றைக்கு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துசமவெளியில் (INDUS VALLEY CIVILIZATION) வாழ்ந்த மக்கள் தமிழ் மொழியையே பேசினர் என்பார் ஸ்பானியாவைச் சேர்ந்த வண. கீராஸ் (HERAS) அடிகளார். அவரது இவ்வாய்வுக் கருத்தினை வேறு அறிஞர் பலரும் ஏற்றுக் கொள்வர்.

தமிழரின் சங்ககாலத்து (கி.மு. 500 - கி.பி. 200) ஊர்ப் பெயர்கள் (கொற்றை, புகார் முதலியவை) பல சிந்து சமவெளியில் வழக்கில் இருந்தமையைத் தனது ஆய்வின் மூலம் கண்டறிந்த ஆய்வாளர் திரு. பாலகிருஷ்ணன் இவ்வரலாற்றுத் தொடர்பை 'விட்ட இடமும் தொட்ட இடமும்' என்று குறிப்பிடுவார். இதன் ஊடாகச் சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்கள் தமிழரே என்னும் உண்மை தானாகவே வெளிப்படக் காண்கின்றோம்.

அண்மைக் காலத்தில் தமிழ் நாட்டின் "கீழடி" என்னும் இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின் போது கிடைக்கப்பெற்ற ஐயாயிரத்திற்குமதிகமான பொருட்களில் சமயம் சார்பான எதுவும் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகின்றது. அப்படியாயின் இது தமிழரின் தனித்துவத்தையே காட்டுகிறது எனலாம்.

மேலும், இங்கு காணப்படும் செங்கல் கட்டிடம் தமிழ் நாட்டில் ஒரு நகர் நாகரீகம் பேணப்பட்டமையையும் அது சிந்துசமவெளி நாகரீகத்திற்கு இணையாக இருக்கலாம் என்ற எண்ணப்பாட்டைத் தோற்றுவிப்பதாகவும் அமைந்துள்ளது என்பர்.


மேற்படி வரலாற்றுக் குறிப்புகள், இற்றைக்கு ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ...

தொடர் 19ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி மனித ஆளுமையும், நாடுகளின் தலைவிதியும்




- பாழுர்வேந்தன் -

தனி மனித ஆளுமைகள் மக்கள் வாழ்வில் பலத்த மாற்றங்களையும், பல்வேறுபட்ட விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன. பொதுவாக அரசியல் தலைமைகளை வகிப்போர் அல்லது நாட்டுத் தலைமையை வகிப்போர் இந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக அமைகின்றனர். தம் கனவுகளை அடைந்துகொள்ள பல்வேறுபட்ட வழிகளிலும் இவர்கள் முயல்வதுண்டு. சமகால வரலாற்றில் உலக நாடுகளின் தலைவர்கள் வரிசையில், உலக சரித்திரத்தின் போக்கில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவர்களாக அமெரிக்க அதிபர், ரஷ்ய அதிபர், சீனப் பிரதமர், வடகொரிய அதிபர் ஆகியோரை நாம் குறிப்பிட்டுக் கூற முடியும்.

இந்தத் தலைவர்களின் அனுபவத்தைப் பொறுத்த வரையில் அவர்களுக்குக் கொஞ்சக் கால அரசியல் அனுபவம் அல்லது ஆட்சி அனுபவங்கள் இருப்பதை உணர்ந்து கொள்ளலாம். ஆனாலும், அமெரிக்க அதிபர் இந்த வகையில் உலகிற்குப் புதிது. சீனத் தலைவர் தனது உன்னத சீனா என்கின்ற கனவை பண்டைக்கால பட்டுப்பாதை போன்ற ஒரு தங்கு தடையில்லாத தொடர்புக்கான போக்குவரத்துப் பாதையை நிர்மானித்துக்கொள்வதன் மூலம் சாதிக்க முனைந்து நிற்பதைக் காணலாம். வளர்ந்து வரும் தனது நாடு தொடர்ந்தும் உலகளவில் ஆதிக்கம் கொண்ட நாடாக அமைய இலங்கை போன்ற பொருளாதார சிக்கலில் இருக்கின்ற – பிற நாட்டுக்கு உட்பட்டு வாழ விரும்பாத நிலையில் இருக்கின்ற– நாடுகளுக்கு தவிர்க்க முடியாத, தவிர்த்துக்கொள்ளமுடியாத உதவிகளை முன்வந்து வழங்குவதன் மூலம் அவற்றைத் தனது நவீன பட்டுப்பாதைக் கனவுக்கு அடிமைகளாக்கிக் கொண்டு இருக்கின்றது. அதனால் தற்போதைக்கு உலகளாவிய ரீதியில் பெருத்த சவால்கள் ஏதுமில்லை என்றே கூற வேண்டும்.

ரஷ்ய அதிபரைப் பொறுத்தவரையிலும் அவரது நாடு பனிப்போர் காலத்தில் இருந்த பெரும் வல்லரசு அமைப்பாக மீண்டும் திகழச் செய்ய வேண்டும் என்கின்ற கனவு இருக்கிறது. ஏனெனில், அந்தக் கால கட்டத்தில் கே. ஜீ. பி. என்கின்ற ரஷ்ய உளவு தாபனத்தின் பொறுப்பிலிருந்து அந்நாட்டு மேன்மைக்காக உழைத்த ஒருவர். முன்னைய ரஷ்ய அதிபர்களான கொர்பச்சோவ், யெல்ட்சின் காலங் களில் ரஷ்யா பிளவுண்டு சிதைவுண்டு போனது அவருக்குப் பிடித்தமில்லை. எனவே, மீண்டும் 'அந்த 'ரஷ்யா' என்ற கனவு அவருக்கு இருக்கிறது. ஆனாலும், உள் நாட்டுப் பொருளாதார சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதென்பது அவருக்கு சவால்மிக்க பணி! இந்தத் தடவை முன்னெப்போதுமில்லாத வகையில் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றியை நிருணயிக்கும் சக்தியாக ரஷ்யா விளங்கியது என்பது தற்போது பரவலாக எற்றுக்கொள்ளப்படுகின்றதொன்று. அந்தவகையில் உலக சட்டாம்பியாக இருக்கின்ற, தேர்தலில் தான் விரும்பும் வெற்றியை உருவாக்கும் வல்லமை கொண்ட அமெரிக்காவையே, தனது முடிவுகளில் மாற்றத்தை எற்படுத்த வைத்த சக்தியாக அவர் இருக்கிறார். இருப்பினும், அவரது 'ரஷ்ய' கனவினால் உலக ஆபத்தை ஏற்படுத்த, தற்போதைக்கு அவர் முன்வரப்போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த இரண்டு பேர்களிலும் வடகொரிய அதிபர் கிம் இளவயதானவர். அமெரிக்காவில் தனது கல்வியை மேற்கொண்டவர். இருப்பினும் அமெரிக்காவுக்குக் கீழ்ப்படிந்து இருப்பதை வெறுப்பவர். தந்தையின் மரணத்திற்குப் பின் வடகொரிய தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர். என்னதான் வாயடித்தாலும் அடிமைப்படாத வடகொரியாவை உருவாக்குகின்ற தனது கனவை நனவாக்க நேர்முகமாகவும், மறைமுகமாகவும் ஏற்பாடுகளைச் செய்பவர். கடந்த காலங்களில் அந்நாடு ஐந்து அணுக்குண்டு பரிசோதனைகளை மேற்கொண்டதையடுத்து ஓரளவு மேற்குலகத்தால் ஒதுக்கப்பட்டு, பொருளாதாரத் தடைகளை எதிர்நோக்கியிருந்தும், சட்ட விரோத நடவடிக்கைகள் மூலம் அவரது கனவுக்கான நிதியைத் தேடிக்கொள்வதன் மூலம் அவரது திட்டங்களில் எந்தத் தொய்வையும் காணமுடியவில்லை.

இந்த வகையில், வெறும் வர்த்தக அனுபவத்தை மட்டும் பின்புலமாக வைத்துக் கொண்டு, போராடி வெல்லும் போர்க்குணத்தை ஆதாரமாக வைத்து எதையும் சாதித்துவிடலாம் எனக்கொண்டு. உலகில் முதல் தர நாடு அமெரிக்கா என்கின்ற கனவுடன் களம் இறங்கியுள்ள டொனால்ட் ட்ரம்ப் தன் வாய்ச் சவடால்கள் மூலம் உலகத்தை அழிவின் பாதை நோக்கி கொண்டு செல்கின்றார் என்றே கருத வேண்டியிருக்கிறது. வெறுமனே பராக் ஒபாமா கொண்டு வந்த திட்டங்கள், சட்டங்கள் என்பதற்காகவும், ஜனநாயகக் கட்சியின் திட்டங்கள் என்பதற்காகவும் அவற்றுக்கெதிராகச் செயற்படத் தொடங்கி, ஊடகங்களால் பெரிதும் வெறுக்கப்படுகின்ற ஒருவராக. உள் நாட்டில் தனக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புக்கள், பின்னடைவுகளால் சரிந்துபோயுள்ள தனது செல்வாக்கை மீண்டும் கட்டியெழுப்ப, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை வட கொரியா பரிசோதித் ததை அடுத்து வரிந்து கட்டிக்கொண்டு சொற்போரில் இறங்கினார். வடகொரியா நினைத்தும் பார்க்க முடியாத, இந்த உலகமே முன்னெப்போதும் கண்டிராத. வேகமும் வீரியமும் கொண்ட பதிலடி வழங்கப்படும் என்று கொக்கரித்தார். வடகொரியா மீது ஐ. நா. சபையில் தடைகளை விதிக்க நடவடிக்கை எடுத்தார். ஆனால், கடந்த வாரம் ஏவுகணைகளில் பொருத்தி ஏவக்கூடியதாக சிறிய, ஆனாலும் முன்னர் பரிசோதித்தவற்றை விடவும் பல மடங்கு சக்தி வாய்ந்த அணுகுண்டை சத்தம் சந்தடியில்லாமல் வட கொரியா பரிசோதித்ததையடுத்து, நிலைகுலைந்து போனார். வடகொரிய விடயத்தில் சீனாவுக்குப் பெரும் பங்கு வகிக்க முடியும், ஆனாலும், அது தானாக முன் வருகிறதோ இல்லையோ அமெரிக்கா தனியாக வடகொரியாவைக் கவனித்துக்கொள்ளும் என்று மார் தட்டி நின்றவர், இப்போது சீனாவால்தான் முடியும், சீனா ஒத்துழைக்க மறுத்தால் வடகொரியாவுக்கு ஆதரவான அதன் செயற்பாடுகளுக்கெதிராக பொருளாதார, வர்த்தக தடைகளைக் கொண்டுவர வேண்டியிருக்கும் என்று ஒப்பாரி பாடிக்கொண்டிருக்கின்றார். சீனா இந்த அச்சுறுத்தலையெல்லாம் கண்டுகொள்ளவேயில்லை. அதைப் பொறுத்தவரையில் வடகொரியா அதன் செல்லப்பிள்ளை. அதனுடைய அச்சுறுத்தலை வைத்து அமெரிக்காவை நடுக்கங் காணச் செய்யலாம் என்கின்ற நிலைமையில் மாற்றமில்லை. ஐ. நா. சபையில் வடகொரியா மீதான தடைக்கு சீனா ஒப்புதல் அளித்தாலும், டொனால்ட் ட்ரம்ப்பின் 'போர்ப் பிரகடனத்தை' அடுத்து 'அமெரிக்கா முதலில் தாக்கினால் நாம் அதை எதிர்ப்போம், வடகொரியா தொடங்கினால் நாம் நடுநிலை வகிப்போம்' என்று சட்டியைக் கவிழ்த்து வைத்துவிட்டது.

டொனால்ட ட்ரம்ப் மற்றும் கிம்மிற்கிடையிலான தனிப்பட்ட போர் ஒத்திகைகளாக அணுகுண்டு விவகாரமும், சொற்போரும் அமைந்து விட்டன. இன்னும் பேசினால் மேலும் வரும் என்பதுபோல் அடுத்தடுத்த பரிசோதனைகளுக்கு வடகொரியா தயாராகி வருகின்ற நிலையில் உலக நாடுகள் பலவும் அச்சத்தில் மூழ்கியுள்ளன. ஒரு அணு ஆயுதப் போரை உலகம் தாங்கிக் கொள்ளாது என்பது நிதர்சனமான உண்மை! ஆனாலும், அத்தகைய போரொன்றின் விளிம்புக்கு வடகொரியாவும், அமெரிக்காவும் உலகத்தைத் தள்ளி நகர்த்திக் கொண்டிருக்கின்றன. இதை அமெரிக்காவும் அறியும். இதனால் தற்போது அமெரிக்க அதிபர், 'யுத்தம் முதன்மை தீர்வாக அமெரிக்காவால் முன்வைக்கப்படமாட்டாது' என்று கூறத் தொடங்கியிருக்கிறார். 'வில் நாணேற்றப்பட்டு விட்டது என்றதும் அவரே. வடகொரியா யுத்தத்திற்காகக் கெஞ்சிக் கொண்டிருக்கின்றது என்று தனது ஐ. நா. சபை தூதுவர் மூலம் கூற வைத்ததும் அவரே!

என்னதான் ஆனாலும் பொறுப்பற்ற வகையில் இரு நாட்டுத் தலைவர்களும் செயல்பட்டுக் கொண்டிருப்பதைத் தொடரக் கூடாது. தம்முடைய கௌரவத்தை முன்னிறுத்திச் செயற்படுவதைத் தவிர்த்து. தத்தமது நாட்டுத் தலைவர்களாக மட்டும் இருந்துவிடாமல் உலகத் தலைவர்களாகவும் அவர்கள் செயற்பட முன்வரவேண்டும். ஜப்பான் அரசருடைய ஆட்சி அதிகாரத்தைப் பெருப்பிக்க எண்ணிச் சேரக் கூடாத கூட்டம் (ஜெர்மனி) சேர்ந்து, ஆடக் கூடாத ஆட்டம் போட்ட, எந்தவிதத் தியாகத்திற்கும் தயாராக இருந்த ஜப்பான் அனுபவித்த துன்பம், ஹிட்லரின் தனிமனித பேராசையால் ஜெர்மனி கண்ட துயரமும், முடிவும் இன்றைய உலகத் தலைவர்களுக்கு நினைவில் இருக்கவே செய்யும்.

அமெரிக்க அதிபரது இன்னுமொரு முடிவாக சமீபத்தில் அமைந்து உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய விடயம் 'உலக வெப்பமடைதல்' பிரச்சினை தொடர்பான செயற்பாடுகளிலிருந்து தான் வெளியெற முடிவு செய்ததுதான். உலக வெப்பமடைதல் உலக சுற்றாடலை, உலக கால நிலையை பெருமளவில் பாதித்து நிற்பதால் முன்னணி உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்தாயின் ....

.. தமிழ்த்தாய் அம்மூன்று பெருநிலப் பரப்புகளிலும் (சுமேரியா, சிந்து சமவெளி, தென்னிந்தியா) அரசோச்சியவள் என்பதை எடுத்துக் காட்டும்.

இதே காலகட்டத்தில் (சுமார் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு) தமிழ் நாடும் ஈழமும் தரைவழியாக இணைந்திருந்தமையால் (பேராசிரியர் கா. இந்திரபாலாவின் இலங்கையில் தமிழர் - பக்கம் 75) எங்கள் மண்ணிலும் தமிழ்த்தாயின் ஆட்சி நடைபெற்றிருக்க வேண்டுமென்று சொல்லவும் வேண்டுமா?

நாடுகள் இத்திட்டத்தை முன்னெடுத்திருந்தன. தற்போது அமெரிக்கா தலையை இழுத்துக் கொண்டு விட்டது. அதன் பலனோ தெரியவில்லலை அமெரிக்கா வரலாறு கண்டிராத பேரழிவை ஹார்வி புயல் மூலம் சந்தித்தது, தற்போது அதை விடவும் மோசமான எர்மா புயல் மூலம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, இதை எழுதிக் கொண்டிருக்கின்றபோது அந்திலாந்திக் சமுத்திரத்தில் இன்னும் மூன்று புயல் அடையாளங்கள் உருவாகியுமிருக்கின்றன. இவை கடவுளின் அடையாளங்களா? 'திருந்து திருந்தி வாழ்' என்று கூறப்படுகின்றதா?

அமெரிக்காவில் தக்க ஆவணங்களின்றி பல திறப்பட்ட கனவுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் சுமார் எட்டு இலட்சத்திற்கும் மேலான இளம் குடியேற்றவாசிகளின் வாழ்வை மனதிற்கொண்டு முன்னைய அதிபர் ஒபாமா அவர்களுக்கென பிரகடனப்படுத்திய சட்டப் பாதுகாப்பையும் டொனால்ட் ட்ரம்ப் நீக்கியுள்ளார். இவர்கள் இராணுவத்தில் கூடச் செயற்படுகின்றனர். சமீபத்திய புயல் அழிவின்போது தம் உயிரையும் பணயம் வைத்த மக்களுக்காக சேவையாற்றியவர்கள். இருந்தும் இவர்களால் தனது நாட்டுக்குப் பாதிப்பு என்று இவர்களை வெளியேற்ற அமெரிக்க அதிபர் எடுத்த முடிவு சரிதானா? காலம்தான் இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும்.

## கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரிக்கு புதிய அதிபர்

திரு. எஸ். ஜோன்ராஜன் அவர்கள் வெளியிட்டிருந்த "கார்மேல்-பற்றிமா கல்லூரிக்குத் துறவிகளின் தலைமைத்துவமே அவசியம்' என்ற கட்டுரையை 'தொண்டன்' இந்த இதழில் (6ம் பக்கம்) உங்களுக்காகப் பிரசுரித்துள்ளது.

இதன் எதிரொலியையும் இத்துடன் வழங்குகின்றோம். கல்முனை கார்மேல்-பற்றிமா தேசிய கல்லூரியின் புதிய அதிபராக டி லா சால் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர். குருஸ் சந்தியாகோ நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மன்னாரைச் சேர்ந்தவர். இவருக்கான நியமனக் கடிதத்தைக் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர். வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் உத்தியோகபூர்வமாகக் கையளித்தனர். கல்விச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் கல்வியமைச்சு வழங்கிய நியமனக் கடிதத்தின் பிரகாரம் புதிய அதிபர் சகோ. குருஸ் சந்தியாகோ கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவரது சபையான டிலா சால் சபையானது உலகின் 60 நாடுகளில் கல்விப்பணி செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. புதிய அதிபர் மன்னாரின் சக பாடசாலை அதிபர்களுடன் பாடசாலைக்குச் சென்று கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

51வது உலகத் தொடர்புதின விழா

மட்/சமூகத் தொடர்பு நிலையத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் உலகத் தொடர்பாடல் தினம் எதிர்வரும் 21.10.2017 அன்று சனிக்கிழமை, காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சமூகத் தொடர்பு நிலையம், அ.பெ.எண் - 44, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழா நிறைவில் "வெட்டாப்பு" பத்திரிகை



: தகவல் : ஜே. எச். இரத்தினராஜா

மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து வெளிவரும் கத்தோலிக்க மாத பத்திரிகையான "வெட்டாப்பு" இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்து தனது வெள்ளி விழாவினை 23.09.2017 சிறப்பித்தது. பத்திரிகையின் ஆசிரியரும், மறைக் கல்வி நடுநிலைய இயக்குநருமான அருட்தந்தை. ஏ. யேசுதாசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா ஆண்டகை கலந்து சிறப்பித்தார். முன்னாள் இணை ஆசிரியர் திரு.ரி.ரி. பிரான்சிஸ் அவர்கள் பத்திரிகையின் வளர்ச்சி பற்றியும், முகம்கொடுத்த சவால்கள் பற்றியும் எடுத்துரைத்தார். ஆயர் அவர்கள் தமதுரையில் "சென்று போதியுங்கள்" என்ற இயேசு கிறிஸ்துவின் அழைப்புக்கிணங்க தனது நற்செய்திப் பணியைப் பரந்தளவில் மேற்கொள்ள தேர்ந்து கொள்ளும் கருவிகளில் ஒன்றே பத்திரிகையாகும். இப் பத்திரிகையானது பல எழுத்தாளர்களை, கவிஞர்களை, நாடக ஆசிரியர்களை உருவாக்கியுள்ளது. வீட்டுக்கொரு விவிலியம் போன்று வீட்டுக்கொரு 'வெட்டாப்பு' என்பதை விருது வாக்காகக் கொண்டு இலட்சியத்துடன் செயற்படவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அத்துடன் இப்பத்திரிகையானது எல்லையைத் தாண்டி ஏனைய மறை மாவட்டங்களுக்கும் செல்லவேண்டுமென்பதே தமது விருப்பு எனக்கூறி தமதுரையை நிறைவு செய்தார்.

இச்சிறப்பு நிகழ்வில் அருட்தந்தை. ஜோசப்மேரி (யே.ச), அருட்தந்தை. டி. சாமிநாதன் ஆகியோருடன் பத்திரிகைக்கு ஆக்கங்கள், ஒத்துழைப்புக்கள் வழங்கியவர்களுக்கும், பணியாளர்களுக்கும், வெள்ளி விழா நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் 'வெட்டாப்பு' வெள்ளி விழா நிகழ்வாக இடம் பெற்ற கட்டுரை, கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கும், க.பொ.த சாதாரண, உயர்தர பரீட்சையில் சிறப்பான பெறுபேறு பெற்றவர்களுக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன. நிகழ்வினை மெருகூட்டும் வண்ணம் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.



மறைமாவட்டந்தனை ஆலமரமாய்
தாங்கித் தழைக்கச் செய்யும்
ஆயனே எம் ஆயரே - உமக்கெம்
பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

தரம் : 11 — கத்தோலிக்கத் திருமறை — நேரம் : 3 மணித்தியாலங்கள்

போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India))

**பகுதி I**

பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

20. இயேசு சோதனைகளை வென்று தான் வளர்ந்த எந்த ஊருக்கு வந்தார்?
1. எருசலேமுக்கு 2. கலிலேயாவுக்கு 3. நாசரேத்துக்கு 4. யூதேயாவுக்கு

21. இயேசு ஓய்வு நாளில் தொழுகைக் கூடத்தில் வாசித்த சுருளேடு எது எனத் தருக?
1. எசாயா 2. எரேமியா 3. மீக்கா 4. எசேக்கியேல்

22. இயற்கைக்கு மாறாக இடம்பெறும் நிகழ்வு "புதுமை" என கூறியவர்:
1. புனித அகுஸ்தினார் 2. புனித யோசேப்வாஸ்
3. புனித ஆசிர்வாதப்பர் 4. புனித சிசிலியாள்

23. இறையாட்சி வந்துவிட்டது என்பதை இயேசு எவ்வாறு வெளிப்படுத்தினார்?
1. புதுமைகளூடாக 2. உவமைகளூடாக
3. போதனைகளூடாக 4. சாத்தானூடாக

24. புதுமைகள் இடம்பெறுவதற்கு அவசியம் :
1. விசுவாசம் 2. நம்பிக்கை 3. அன்பு 4. பக்தி

25. எழுபத்திரண்டு பேரின் மறைத்தூதுப் பணி பற்றிக் குறிப்பிடும் ஒரேயொரு நற்செய்தியாளர்:
1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

26. எழுபத்திரண்டுபேரைப் பணிக்கு அனுப்பும்போது புறப்பட்டுப் போங்கள் ஓநாய்களிடையே எவற்றை அனுப்புவதுபோல் நான் உங்களை அனுப்புகிறேன் என்றார்?
1. ஆட்டுக்குட்டிகளை 2. செம்மறியை 3. பசுவை 4. குழந்தைகளை

27. இறையாட்சியைப் பரப்பும் பொறுப்பை திருச்சபையானது எமக்கு எவற்றின் மூலம் தருகிறது?
1. குருத்துவத்தின் மூலம் 2. திருமுழுக்கின்மூலம்
3. திருமணத்தின்மூலம் 4. உறுதிப்பூசுதலின்மூலம்

**பாடம் : 11**

28. இறையாட்சி என்பது :
1. இறை விருப்பத்திற்குப் பணிவதாகும் 2. இறைவனுடைய இடமாகும்
3. மோட்சமாகும் 4. இறைவனுடைய அரசாட்சியாகும்

29. "வாழ்வதென்பது கிறிஸ்துவோடு இருப்பதாகும். கிறிஸ்து எங்கு இருக்கிறாரோ அங்கு வாழ்வும் இறை ஆட்சியும் இருக்கின்றன" இவ்வாறு கூறிய புனிதர் :
1. தூய அம்புறோஸ் 2. தூய அகுஸ்தினார்
3. தூய ஆசீர்வாதப்பர் 4. தூய வின்சன் டி பவுல்

- தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

- ஆதிரையான் -



மனம் - குளிர்காயும்
மணல் வார்ப்புகள்
தொண்டை - நனைக்கும்
நீர்க்கொடிகள்

அண்மையில் பரீட்சைக் கடமையொன்றிற்காகச் சென்றிருந் தேன். பரீட்சையெல்லாம் முடிவுற்ற பின் ஒரு பரீட்சார்த்தி இரண்டு கவிதை நூல்களை என்னிடம் தந்துவிட்டுச் சென்றார். அவ்விரண்டு கவிதை நூல்களையும் அவரே எழுதியிருந்தார். முதற் கவிதைத் தொகுதியின் பெயர் "சுடுகாட்டு ரோஜா" மற்றைய கவிதைத் தொகுதியின் தலைப்பு "உனை நீயே செதுக்கு". கவிஞரின் பெயர் - சொற்சிற்பி இ. சபா. அவற்றை வாசிக் கும் போது இவ்விளைஞனுக்குள் இவ்வளவு ஊற்றுக்களா? என்று எண்ணத் தோன்றுகின் றது.

அதில் 'விறகு' என்னும் கவிதையின் சில வரிகளை வாசிக்கும்போது சிந்திக்க வைக் கின்றது.

வயிற்றுளைப்பு - புரியாத
வன இலாகா
வசந்தகாலம்
காணாத - வறண்டகாடு
தன் வலிகளிலும்
பங்குகொள்ளும்
இரும்புக் கோடரி
மலை போல
ஏற்றங்கள்

ஒரு நாள் - சோற்றுக்கு
இரு - நாள்
உழைப்பு
ஓரம் சாய்ந்து - படுக்கையிலும்
ஓராயிரம் மனக்கசப்பு

வேலிக் கட்டையும்
விறகாகும் - காலமாச்சி
தாலிக்கொடியும் - பெண்களுக்கு
தாழம்பூவின்
கனவாச்சி

என்றவாறு போகின்றது 'விறகு' என்னும் கவிதை.

அவருடைய 'உனை நீயே செதுக்கு' என்னும் கவிதைத் தொகுதிக்கு மூத்த பேராசிரியர் சி.க. சிற்றம் பலம் அவர்கள் (யாழ்பல்கலைக்கழகம்) அணிந்துரை எழுதியுள்ளார்கள்.

அதில் சில துளிகள்

நிம்மதி
துரோகம்
என்பதை
தூக்கியெறிந்து பார்
விரோதி - கூட
உனக்கு
விடியல்
தருவான்.

பாசம்
நீ
உண்ட
நிலாச் சோறு
நீ
பார்க்கும்
நிலவுக்கும்
கிடைக்குமா?.......



"முன்னேற்றத்திற்கு சந்தர்ப்பம் வரும் என்று காத்திருப்பதில் அர்த்தம் இல்லை. சந்தர்ப்பங்களை நாம்தான் உருவாக்கி முன்னேற வேண்டும்."

: பேர்னாட் ஷா :




"சுடுகாட்டு ரோஜா" - "உனை நீயே செதுக்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர்களை அறிவோம்

ஒக்டோபர் : 2017

மற்றில்டா இராஜேந்திரம்




## ஒக்டோபர் 8ந் திகதி : புனிதர்களான செர்ஜியுஸ் மற்றும் பக்கஸ் (st sergius and st bacchus)



இவர்கள் இராணுவ வீரர்களின் பாதுகாவலர் ஆவர். உரோமில் 3ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். ஆளுநன் மக்ஸியானுஸின் படையில் இராணுவ வீரர்களாக இருவரும் இணைந்து போர் புரிந்தனர். தமது மேன்மையான குண நலன்களாலும், திறமையினாலும் உயர் பதவி பெற்றனர். நெருங்கிய நண்பர்களான இவர்கள் கிறிஸ்துவின் போதனைகளையேற்றுத் திருமுழுக்குப் பெற்றுக் கிறிஸ்தவர்களாகி யாருக்கும் தெரியாமல் கிறிஸ்தவர்களாக வாழ்ந்தனர். 10வது மறைக்கலகம் நடைபெற்ற காலமது. பேரரசன் டயோக்கிளிசியன் கிறிஸ்தவர்க்கெதிராக ருத்ர தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தான். ஒருநாள் மக்ஸிமியானுஸ் தன் தெய்வத்தை வழிபடச் சென்றான். உடன் சென்ற வீரர்களில் செர்ஜியுசும், பக்கசும் இருந்தனர். அனைவரும் ஜுபிடர் கோவிலுக்குள் நுழைய இவர்களிருவரும் வெளியே நின்றுவிட்டனர். இதனால் இவர்கள் கிறிஸ்தவர்கள் என ஏனையோர் அறிந்துகொண்டனர். ஆளுநன் அழைத்து விசாரித்தபோது, இருவருமே பெருமிதத்துடன் "தாம் கிறிஸ்தவரகள்" என அறிக்கையிட்டனர். கோபத்தில் அவன் கொந்தளித்தான். அங்கு நின்றோர் இவர்களை எள்ளி நகையாடினர், காரித் துப்பினர், அடித்தனர், திட்டினர், சங்கிலிகளால் கட்டிப் பெண்களின் உடைகளணிவித்து நகர வீதிகளில் இழுத்துச் சென்றனர். எதுவுமே பயனளிக்காததைக் கண்ட ஆளுநன், மொசப்பட்டோமியாவில் உள்ள பார்பலிசன்ஸ் எனுமிடத்திலிருந்த இராணுவக் கட்டளைத் தளபதி அந்தியோக்குஸ் என்பவரிடம் இருவரையும் அனுப்பினான். இவன் செர்ஜியுசின் முன்னாள் நண்பன். எனவே, இவன் சொன்னால் நிச்சயம் கிறிஸ்தவத்தை மறுதலிப்பான் நண்பன் என நம்பினான் ஆளுநன். ஆனால், கிறிஸ்துவை இன்னு மதிகமாக இருவரும் நேசித்தனர், புகழ்ந்தனர். எனவே, அந்தியோக்குஸ் இருவரையும் கடுமையாகத் தாக்கவே, வலி பொறுக்கமுடியாத பக்கஸ் அந்த இடத்திலேயே மறைசாட்சியானார். உயிர் போய்க் கொண்டிருக்கும் நிலையிலிருந்த செர்ஜியுசை மேலும் துன்புறுத்தினர். முள் காலணிகள் அணியச் செய்து ஏறத்தாள 29 கிலோ மீற்றர் தூரம்வரை நடத்திச் சென்றனர். மிகுந்த வேதனையடைந்து மனங்கலங்கி நின்றபோது பக்கஸ் காட்சியளித்து "விசுவாசத்தை விட்டுவிடாதே. நாம் இருவரும் இறுதிவரை இணைந்தே இருப்போம்" என்று திடப்படுத்தினார். இறுதியில் தலை வெட்டப்பட்டு செர்ஜியுஸ் மறைசாட்சியானார். 303ம் வருடம் மறைசாட்சிகளான இவர்களது புகழ் எங்ஙனும் பரவியது.

## ஒக்டோபர் 22ந் திகதி: திருத்தந்தை புனித 2ம் அருள் சின்னப்பர்

போலந்து நாட்டு வொடோவைஸ் நகரில் கரோல், எமிலியா கசொரஸ்கா தம்பதியினருக்கு 2வது மகனாக 1920ம் வருடம் வைகாசித் திங்கள் 18ம் நாளன்று இவர் பிறந்தார். கரோல் ஜோசப் வொய்த்திவா எனும் இயற்பெயர் கொண்டவர். இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற தந்தையின் குறைந்த வருமானத்தில் குடும்பம் வாழ்ந்தது. ஆரம்பக் கல்வி கற்பதிலும், ஆலயம் செல்வதிலும் நாட்டம் கொண்ட இவர் சுறுசுறுப்பாகத் திகழ்ந்தார். இவ்வேளையில் தனது 9வது வயதினிலே தாயை இழந்தார். அண்ணன் எட்வட் நோயால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாக்கப்பட்டு இவரது 13வது வயதினிலே இறந்தார். பாடசாலை நண்பனுடன் விளையாடுவார். தாய், தந்தையரிட மிருந்து இறை பக்தியைக் கற்றுக் கொண்ட வொய்த் திவா இலத்தின், கிரேக்கம், ஜேர்மன் மொழிகள் கற்று பரந்துபட்ட அறிவுடையவரானார். கால்பந்தட்டம், பனிச்சறுக்கு, நீச்சல் ஆகியவற்றில் ஈடுபடுவார். அத்துடன் நாடக ஆசிரியராகவும், சிறந்த நடிகரா கவும் திகழ்ந்தார். தந்தையும், மகனும் கிராகோவ் நகரில் 1938ம் வருடம் குடியேறினர். 2ம் உலகப் போரின்போது படிக்க வழியின்றி கிடைத்த வேலையைச் செய்து வாழ்ந்தார். அனைத்துக் கும் மத்தியில் இறையழைத்தல் உள்ளத்தில் ஊற்றெடுத்தது. 1942ம் வருடம் குருத்துவப் பயிற்சிக்காகச் சென்று 1946ம் வருடம் குருவுமா னார். கருதினால் சபியேகா இறையியல் மேல் படிப்புக்காக இவரை உரோமுக்கு அனுப்பினார். அங்கு 1948ம் வருடம் முனைவர் பட்டம் பெற் றார். தன் ஊருக்கே திரும்பியவர் நியோ கோவிக் எனும் கிராமத்தைப் பொறுப்பேற்றார். ஆலயத்தைப் புதுப்பித்தார். நாடகத் துறையில் இளைஞர்க்குப் பயிற்சியளித்தார். சிறந்த மறை யுரைகளால் மக்களைக் கவர்ந்தார். 1958ம் வருடம் பேராயர் பசியாக்கிற்குத் துணை ஆயரா னார். திடீரென பசியாக் இறந்துவிட இவரே கண்காணிப்பாளராகி 2ம் வத்திக்கான் பொதுச் சங்கத்திலும் பங்கேற்றார். 1978ம் வருடம் திருத்தந்தை 1ம் அருள் சின்னப்பர் திடீரென மறைந்துவிட இவர் திருத்தந்தையானார். அற நெறிப் பார்வையுடன் வாழ்ந்தார். கருக்கலைப் புக்களை, கருத்தடைச் சாதனங்களை எதிர்த் தார். சமூகப் பார்வை உள்ளவராகத் திகழ்ந்தார். அமைதியின் திருத்தூதராகத் திகழ்ந்தார். கீழை, பழைமைத் திருச்சபையுடன் நல்லுறவை ஏற்ப டுத்த பல நாடுகளுக்குப் பணயித்தார். 1981ம் வருடம் வைகாசித் திங்கள் 13ம் நாளன்று அலி அக்கா என்பவனால் துப்பாக்கியால் சுடப்பட் டும் மறுஜென்மம் எடுத்துத் திருச்சபையை வழி நடத்திய திருத்தந்தை 2005ம் வருடம் சித்திரைத் திங்கள் 2ம் நாளன்று இறையடி சேர்ந்தார். திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பர் 01.05.2011 அன்று இவரை அருளாளர் ஆக்கினார். 27.04.2014 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் இவரைப் புனிதராக உயர்த்தினார். ●

# உதித்தது சுடரொளி

சுடரொளி வீசிட இருளகம் போக்கிட
இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவில்
அருட்தந்தை. ஜே. சந்திரா அடிகள்
இதயங்கள் யாவும் ஒன்றாய் இணைந்திட
மகிழ்ச்சிமிகு இந்நாள் இறைவன் சித்தம்
மகிமையில் ஒளிருதே! ஒளிருதே!

இதுவரை மானிட மனதில் அதிசயம்
ஆச்சரியம் குடி கொண்டதே
இறைசித்தம் இருந்ததை எண்ணி
மானிடம் இறைவனைத் துதித்ததே
உம்மைக் கொண்டு தேவனின் ஆவி
தன்னை ஏந்திய வண்ணமாய்
கலந்த உறவில் அமைதியின் பாதையில்
இறை பணியை ஆற்றினீர்

தனியனாய் பயணங்கள் சென்றமை
தனி அடையாளம் அல்லவா?
இயேசுவின் பணி இது அல்லவா?
கருவறை முதற்கொண்டு பணிசெய்ய
கல்வாரிப் பயணமதில் சென்ற
எம் தந்தை கௌரவம் பார்த்ததில்லை
இனியும் கவலை இல்லை
என்றும் இறைவன் உம்மோடு

சிலுவையின் மகிமையால் நீங்கள்
பிரகாசித்து இறைசித்தம் நிறைவேற்றினீர்
பலர் அறிவார் உங்கள் பணிகள்
ஏழைக்கு ஏழையாய் பாங்காளனாய்
அதிசய பணி வாழ்வு தன்னிலே
திக்கற்றவர் மத்தியில்தானே
அநாதைக்கு அநாதையானீர் - இதில்
யாரும் உமக்கு நிகரில்லை

உயர்ந்தோர் தாழ்ந்தோர்
சமத்துவ வாழ்வின் பணியது
பலரின் இதயங்களில் இன்னும்
மறைய வில்லையே
இதனால் ஆசி என்றும் உண்டு
உமக்கு அதுமட்டுமல்ல
இன்னும் எழுந்து பிரகாசிக்க
இறைவனை வேண்டுகின்றோம்.

■ மேரி (செட்டியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை தெரியாத ....**

"இந்தா, இப்ப சுணங்காம வாறன்" எண்டு போனவன் அதோ மரண அறிவித்தலில் கலந்து போனான். என் மனதில் விடைதெரியாத வினாக்கள் பல எழுகின்றன. அவன் ஒரு நிமிடம் முந்தி அல்லது பிந்திப் புறப்பட்டிருக்கலாமே? கடையில ஒரு நிமிடம் தாமதித்திருக்க லாமே? ஏன் அப்படி நடக்கவில்லை? இதுதான் விதியா? இல்லை விதியென்ற பெயரில் நாம் நம்மை ஆற்றிக்கொள்ளும் நாடகமா? மண்டைக்குள் வண்டொன்று குடைய வலி தாங்கமுடியவில்லை நடக்கிறேன். பாதை நீண்டு செல்கிறது.






கணவன் : *கலெண்டர்ல என்ன பாக்கிற?*

மனைவி : *பல்லி விழும் பலன் .....*

கணவன் : *கொண்டா... நான் பாக்கிறன்..... அதுசரி... பல்லி எங்க விழுந்தது?*

மனைவி : *நீங்க சாப்பிட்ட சாம்பார்ல...*

அன்று அன்ரன் வீட்டில் எல்லாரும் Big Boss பார்த்துக்கொண்டிருந்தார்கள். அன்ரனின் மகன் தகப்பனிடம் கேட்டான்.

"வீட்டுக்குள் நடப்பதெல்லாம் எப்படியப்பா Big Boss க்கு தெரியுது"

"அது மகன் வீட்டுக்குள்ள முப்பது கமராக்கள் பூட்டியிருக்காங்க... அதன் மூலம் எல்லாரும் தெளிவாகப் பார்க்க ஏலும்...."

"அப்ப எண்டா அவங்க செய்யற சரி பிழையெல்லாம் நாம பார்க்கலாம் அல்லவா....?"

"ஓமோம்... மகன்..."

"அப்படியெண்டா இன்னொரு Big Bossம் இருக்கார் அப்பா..."

"யாருடாப்பா அது...?"

"நம்மட ஆண்டவர்தான் ..... உலகம்தான் வீடு..... நாமதான் வீட்டுக்காரர்கள்.... எண்ண முடியாத கமராக்கள் சம்மனசுகளின் கண்கள்...."

அன்ரன் வியந்து போய் இருந்தார். ■







- பற்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்/மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலையம் நடாத்திய

# போட்டி முடிவுகள்

### கட்டுரைப் போட்டி - "குடும்பங்களைக் கட்டியெழுப்பிய தூய யோசேப் வாஸ்"

**1ம் பரிசு - 5,000/=**
திருமதி. கருணா கிறிஸ்ரி லோகநாதன்,
"ஷோபனம்",
கத்தோலிக்க ஆலய வீதி,
திருக்கோவில் - 02.

**2ம் பரிசு - 3,000/=**
ஸ்டான்லி டினேஸ் அனி ஜேபோஷா,
9/2, பிரதான வீதி,புதூர்,
மட்டக்களப்பு.

**3ம் பரிசு - 2,000/=**
ஞா. யுகந்தன்,
புனித சூசையப்பர் சிறிய குருமடம்,
விமான நிலைய வீதி,
திருப்பெருந்துறை,
மட்டக்களப்பு.

### கவிதைப் போட்டி - "தூய யோசேப் வாஸ் புரிந்த பணிகள்"

**1ம் பரிசு - 5,000/=**
திரு. அ. குமார் கொறேயிரா,
"கொட்டியாரத்தான்",
C/O. M.K. லீமா றோசலின் கொறேயிரா,
தையல் போதனாசிரியை,
மூதூர் மத்திய தையல் நிலையம்,
மின்சார நிலைய வீதி,
மூதூர்.

**2ம் பரிசு - 3,000/=**
திருமதி. கருணா கிறிஸ்ரி லோகநாதன்,
"ஷோபனம்",
கத்தோலிக்க ஆலய வீதி,
திருக்கோவில் - 02.

**3ம் பரிசு - 2,000/=**
திரு. ச. குமாரராசா,
6/50, சொறிக்கல்முனை,
சம்மாந்துறை.

### பேச்சுப் போட்டி

**பிரிவு - I : 1ம் பரிசு - 5,000/=**
செல்வி. ஜோசப் ஜொபினா,
புனித சூசையப்பர் ஆலயம்,
தன்னாமுனைப் பங்கு.

**பிரிவு - II : 1ம் பரிசு - 5,000/=**
செல்வி. J. ஜெனிபர்,
புனித சூசையப்பர் ஆலயம்,
தன்னாமுனைப்பங்கு.

### நாடகப் போட்டி

**1ம் பரிசு - 10,000/=**
புனித சூசையப்பர் ஆலயம்,
தன்னாமுனைப் பங்கு.

**2ம் பரிசு - 7,500/=**
புனித சூசையப்பர் ஆலயம்,
தன்னாமுனைப் பங்கு.

### நடனப் போட்டி

**தனி நடனம் பிரிவு - I : 1ம் பரிசு - 5,000/=**
செல்வி. மிஸ்ரிகா ஷஹாரி ரஞ்சித்குமார்,
புனித மரியாள் பேராலயம்,
புளியந்தீவு.

**தனி நடனம் பிரிவு - II : 1ம் பரிசு - 5,000/=**
செல்வி. யொவானா ஷேமுஹி கொறேய்ரா,
புனித மரியாள் பேராலயம்,
புளியந்தீவு.

**குழு நடனம் 1ம் பரிசு - 10,000/=** புனித மரியாள் பேராலயம், புளியந்தீவு பங்கு.

### பாடல் போட்டி

**தனிப்பாடல் : 1ம் பரிசு - 5,000/=**
செல்வி. லூட்ஸ் ஜெல்லோரின் கலிஸ்டஸ்,
புனித செபஸ்தியார் ஆலயம்,
புளியடிக்குடாப் பங்கு.

**குழுப்பாடல் : 1ம் பரிசு - 10,000/=**
புனித சூசையப்பர் ஆலயம்,
தன்னாமுனைப் பங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. பெலிஸ்தியர் கடவுளின் பேழையைக் கைப்பற்றி, எபனேசரிலிருந்து ...................... கொண்டு சென்று தாகோன் கோவிலுக்குத் தூக்கிவந்து, அச்சிலை அருகே வைத்தனர். மறுநாள் மக்கள் விழித்தெழுந்தபோது, தாகோன் சிலை விழுந்து கிடந்ததைக் கண்டனர்.

அ) யூதேயா ஆ) அஸ்தோது இ) போர்க்களம்

2. அவர்கள் அதையெடுத்து மீண்டும் நிலை நிறுத்தினர். மறுநாள் காலையிலும் அதேபோல் நடந்திருந்தது. ஆனால், அதன் தலையும், இரு கைகளும் ...................... வாயிற்படியில் கிடந்தன. அதன் உடல் பகுதி மட்டும் எஞ்சியிருந்தது. ஆண்டவரின் கை அவர்களை வன்மையாகத் தாக்கியது.

அ) துண்டிக்கப்பட்டு ஆ) வெட்டப்பட்டு இ) வீசப்பட்டு

3. ஆண்டவர் அவர்களை மூலக்கட்டிகளால் வாட்டினார். எனவே, அஸ்தோதின் மக்கள் இதைக்கண்டு, "இஸ்ரயேலின் கடவுளது பேழை நம்மிடையே இருக்கலாகாது. ஏனெனில், அவரது கை நம்மையும் நம் ...................... தாகோனையும் வன்மையாகத் தாக்கியுள்ளது" என்றனர்.

அ) கடவுள் ஆ) தெய்வம் இ) தலைவன்

4. அவர்கள் பெலிஸ்தியத் தலைவர்களை ஒன்றுதிரட்டி "இஸ்ரயேலரின் கடவுளது பேழையை என்ன செய்வோம்" எனக் கேட்க அவர்கள் "காத்து நகருக்கு எடுத்துச் செல்ல வேண்டும்" என்று கூறவே, அவர்கள் பேழையை எடுத்துச் சென்றனர். அதன்பின் ...................... கை அந்நகரை அழித்தது.

அ) கடவுளின் ஆ) யாவேயின் இ) ஆண்டவரின்

5. கடவுளின் பேழையை எக்ரோனுக்கு அனுப்பியபோது எக்ரோனியர் " ...................... அழிக்கவே இதைக்கொண்டு வந்துள்ளனர்" எனக் கத்தினர். எனவே, அவர்கள் ஆளனுப்பிப் பெலிஸ்திய தலைவரை அழைத்து, "பேழையை அதன் இடத்திற்கே அனுப்புங்கள்" என்று கேட்டனர்.

அ) எக்ரோனியரை ஆ) எங்களை இ) மக்களை

6. கடவுளின் கை அவர்களை வன்மையாகத் தாக்கியதால், ...................... எங்கும் மக்கள் இறந்தனர். கூக்குரல் வான்மட்டும் எழுந்தது. ஆண்டவரின் பேழை ஏழு மாதம் பெலிஸ்தியர் நாட்டில் இருந்தது. அவர்கள் அர்ச்சகர்களையும், குறி சொல்பவர்களையும் அழைத்தனர்.

அ) பெலிஸ்தியநாடு ஆ) அஸ்தோது நகர் இ) அந்நகர்

7. பெலிஸ்தியர் அவர்களிடம் "ஆண்டவரின் பேழையை எங்கு அனுப்ப வேண்டும்" எனக் கேட்டபோது, "அதை வெறுமையாக அனுப்பக்கூடாது; ...................... கட்டாயம் செய்யவேண்டும். அப்போது குணமாவீர்கள்" என்றதற்கு "அது என்ன?" என்றனர். அவர்கள் என்ன செய்யவேண்டுமெனக் கூறினர்.

அ) குற்றநீக்கப் பலி ஆ) தகனப்பலி இ) சாந்திசெய்யும் பலி

8. பெலிஸ்தியரும் அவர்கள் கூறியபடி செய்து ஆண்டவரின் பேழையைக் கொண்டு சென்றனர். அப்போது பெத்சமேசு வாழ் மக்கள் கோதுமை அறுவடை செய்துகொண்டிருந்தனர். அவர்கள் ஆண்டவரின் பேழையைக் கண்டு மகிழ்ந்தபோது ...................... வயலுக்குள் வண்டி வந்து நின்றது.

அ) யோசுவாவின் ஆ) எக்ரோனின் இ) பெத்சமேசின்

9. ...................... மக்கள் எரிபலிகளையும், வேறு பலிகளையும் ஆண்டவருக்குச் செலுத்தியதைக் கண்டதும் பெலிஸ்தியத் தலைவர்கள் எக்ரோனுக்குத் திரும்பினர். பெலிஸ்தியரின் குற்றநீக்கப் பலிகள் பெலிஸ்திய நகர்களின் எண்ணிக்கைக்குச் சரியாக இருந்தன.

அ) எக்ரோனின் ஆ) பெலிஸ்திய இ) பெத்சமேசின்

10. பெத்சமேசு வாழ் மக்களை ஆண்டவர் சாகடித்தார். ஏனெனில், அவர்கள் ஆண்டவரின் பேழைக்குள் உற்றுநோக்கினர். ...................... பேரை அவர் வீழ்த்தவே ஆண்டவர் இப்பெரும் அழிவை ஏற்படுத்தியதற்காகப் புலம்பி கிரியத்து எயாரிம் மக்களைப் பேழையை எடுத்துச் செல்லச் சொன்னார்கள்.

அ) எண்பது ஆ) எழுபது இ) அறுபது

[விசாரிப்படிவத்திலேயே விடைகள் எழுதிய துண்டிப்பட வேண்டும், பிறிதாக எழுதப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் – 172

## பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

1. பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பேர்க் ஆகிய 3 நாடுகளையும் குறிக்கும் ஒரு சொல் :
   (மோஸ் ஸ்கேல் - பெனலக்ஸ் - யுரேனஸ்)
2. உலகில் அதி உயரமான அலைகள் உருவாகும் விரிகுடா :
   (ஹட்சன் - வங்காளம் - ப∴ண்டி)
3. 'லாஜனேரியா வல்காரிஸ்' எனும் தாவரப் பெயர் கொண்ட காய் :
   (போஞ்சிக்காய் - பீர்க்கங்காய் - நாடங்காய்)
4. போசியுஸ் நிசேயா அறிக்கையில் "பீலியோக்குவே" சேர்க்கப்பட்டதன் விளைவு :
   (பிரிவினை - கலாபனை - கலவரம்)
5. 'அகந்தை கொண்டோர் நிச்சயம் ..............................'
   (சாவர் - அழிவர் - ஒழிவர்)
6. எதிர்மறை வினைமுற்றில் தன்மை ஒருமையாக வருவது :
   (வரேன் - வராய் - வரீர்)

பெயர் : ....................................................................................................

முகவரி : ....................................................................................................

....................................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் – 172
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போட்டி முடிவுகள்...

## திருவிவிலியம் கற்போம் - 170 விடைகள்

காட்சியும், கண்பார்வை, அடியேன், ஆண்டவரை, வார்த்தை, அடியான், மறுமொழி, வீட்டுக்கு, ஏலி, சீலோவில்

## அறிவை வளர்ப்போம் - 170 விடைகள்

1. மெக்ஸிக்கோ
2. டுட்சி
3. 1917.05.13
4. முள்ளங்கி
5. புறத்திதான்
6. கூட்டுப்பெயர்

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி II ம் பிரிவில் 200/= பரிசு பெறுவோர்**

- செல்வன். றியோடன் றொசாயிறோ,
  இல. 20/24, சின்ன ஊறணி,
  மட்டக்களப்பு.
- J. டன்ஸ்ரன்
  2C. புளோரி வீதி,
  மணற்சேனை,
  கல்முனை.
- K. அனோமிக்கா,
  6/50, சொறிக்கல்முனை,
  சம்மாந்துறை.
- செல்வி. அக்ஷிதா டேனிஷா டெரன்ஸ்,
  26/15, 3ம் குறுக்கு,
  இருதயபுரம் மேற்கு,
  மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 122 முடிவுகள்**

**முதலாம் பரிசு - 400/=**

ந. பிரனிஷா,
இல. 13, பிரதான வீதி,
புதூர்,
மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு - 300/=**

ஜோ. டேனுஜா,
வட்டை விதானை வீதி,
பெரிய நீலாவணை - 01B.

**மூன்றாம் பரிசு - 200/=**

க. ஷப்திகா,
8ம் குறுக்கு,
திராய்மடு,
மட்டக்களப்பு,

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










23.09.2017 அன்று அருட்தந்தை. ஜே. ஐ. சந்திரா அடிகளாரின்
குருத்துவ வெள்ளி விழா நிகழ்வும், நன்றித் திருப்பலியும் புளியந்தீவு,
தூய அந்தோனியார் திருத்தலத்தில் இடம்பெற்றது.
இதில் குருத்துவ வெள்ளி விழாவினை நிறைவு செய்த
அருட்தந்தை. என்.சீ. அருள்வரதன், பொன்விழாவை நிறைவு செய்த
அருடதந்தை. டி. சாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டதுடன்
கௌரவத்தினையும் பெற்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org